

OFFICE OF THE ...
27 FEB 1936
MADRAS

# "சித்தன்"

ஓர் மாதாந்தப் பத்திரிகை.

| மாலை 1. | டிசம்பர் 35. | மணி 12. |
| --- | --- | --- |
| Vol. 1. | December. 35. | No. 12. |

உள்ளுரை. பக்கம்.

1. ஏழை இந்தியா .... .... 431
2. காகிடைபுரம் .... .... 435
3. உறுதி! உறுதி! .... .... 437
4. மாதுளங்கனி .... .... 439
5 தியாகம் ... ... 443
6. மாதர்களின் மறுமணம் ... ... 450
7. தக்ஷணத்தில் ஸ்திரீகள் நிலை ... 451
8. "நான் இந்தியன்". ... 455
9. செய்தித் திரட்டு ... 457
டம் ... ... 459
.... ... 463
பகுதி .... ... 465
தி ... ... 467
... ... 469
ணக்கு ... ... 472
கள் ... ... 474

JL
ൗ21, M35 CN
M35 · 1·12
189925

ஆசிரியர் C. P. சாமி.

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம், வைத்தியம், சுகாதாரம் முதலிய அரிய கட்டுரைகளுடனும், தமிழ் வைத்தியர்கட்கு பெரிதும் பயன்படும் விஷயங்களுடனும் ஆங்கிலத் திங்கள் தோறும் பழனியினின்றும் வெளிவருகிறது.

---

### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு | உள் நாடு | .... | ரூ. 0—8—0. |
| ,, | வெளி நாடு | ... | ரூ. 1—0—0. |
| | தனிப்பிரதி | .... | ரூ. 0—1—0. |

சந்தாத்தொகையை முன்னாடியே செலுத்திவிடவேண்டும். வி. பி. யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எப்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அவ்வருட ஜனவரி மீ-முதல் கணக்கு வைக்கப்பட்டு, ஜனவரி-மீ சஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும். பதில் விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவேண்டும்.

---

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு | முழுப்பக்கம் | ரூ. 5—0—0, |
| ,, | அரைப்பக்கம் | ரூ. 3—0—0. |
| ,, | கால்பக்கம் | ரூ. 1—8—0. |

N. B:— நீடித்து விளம்பரஞ்செய்வோர் எமக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,
பழனி. S. I.

# "சித்தன்"

## பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

## மாதாந்தப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.

| மாலை 1. | டிசம்பர். 1935 | மணி 12. |
|---|---|---|

## ஏழை இந்தியா.

இந்தியர்களாகிய நாம் எல்லோரும் ஏறக்குறைய தரித்திரநாராயணர்களாய், உயிர்ப் பிணங்களாய் நடமாடுகிறோமென்பது கண்கூடு. எனினும் அதற்கு யாதுகாரணம என்பதையுணர்ந்து அவ்வறுமைப்பிணியினின்றும் காப்பாற்றிக்கொள்ள வகைதேடாமலிருப்பது வெட்கக்கேடான காரியமாகும்.

ஒரு நாட்டின் உயிர்நாடி விவசாயம், கைத்தொழிலபிவிருத்தி, வியாபாரம் முதலியவைகளில் அடங்கும். எனவே நம் நாட்டில் அவை குன்றியிருத்தலே ஏழ்மைக்குக் காரணம் எனலாம். மேனாட்டாரின் நாகரீகத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் நாம் அவர்கள் அடைந்துள்ள செல்வநிலைக்குக் காரணபூதமான தொழில், வாணிபம் முதலிய துறைகளில் விசேஷ கவனம் செலுத்திப் பயிற்சியும் பெறவேண்டும். நமக்கு எப்போதும் வேண்டிய பொருள்களை நாமே தயாரித்துக்கொள்வதில் எத்துணை நன்மை என்பதைச்சிந்தித்துப் பாருங்கள். நமது தேசம் பண்டைக் காலத்திலிருந்தது போல சீரும் சிறப்பும் பெறவேண்டுமானால், நாமனைவரும் மக்களாய் வாழவேண்டுமானால் தொழிலுலகத்தில் முடியேற வேண்டுவது அத்யாவசியமாகும்.

184925

நம் தேயம் சகல விஷயங்களிலும் சிறப்புடையதாயிருக்க நாம் மட்டும் அதனை அபிவிருத்திசெய்து ஆண்டனுபவிக்க வழிதெரியாது விழிப்போமானால், சோம்பேறிகளாய் நிற்போமானால் மேயோ போன்ற மேனாட்டு மாதரசிகள் ஏன் நம்மை எள்ளி நகையாடமாட்டார்கள்? என்னே கோழைகள்! என்னே பேதமை! என்னே நமது மதியீனம்! வெட்கம்! வெட்கம்!!

இங்கு தொழில்முறைக்கு வேண்டிய மூலாதாரப் பொருள்கள் ஏராளமாயிருக்கின்றன. மேலும் உபயோகமற்று வீணில் சிதறிக்கிடந்து அழிந்துபோகும் வஸ்துக்களோ அனந்தம். இதர நாடுகளில் அவைகளைக்கொண்டு போய் பயன்படக்கூடிய பலவித சாமான்கள் தயாரிக்கின்றனர். நமது விவேகானந்தர் அமெரிக்காவின் தொழில் முன்னேற்றத்தைக்கண்டு பிரமித்துவிட்டாரென்றால் அவர்களது ஊக்கத்தையும், புத்துணர்ச்சியையும்பற்றி என்னென்று கூறுவது? இக்காரணம்பற்றியே நமது அரசியல் தலைவர்களெல்லோரும் நம்நாட்டுக்கைத்தொழிலை முற்றிலும் விருத்திசெய்யுமாறு நம்மை அடிக்கடி வற்புறுத்துகின்றனர்

நம் நாட்டில் அதிகமாகவும் மலிவாகவும் கிடைக்கக்கூடிய புஷ்பங்களினின்றும், இலை வேர்களினின்றும் திராவங்களிறக்கியும், அபூர்வமான மருந்துகள் தயாரித்தும், சில பழங்களைக்கொண்டு சர்பத்துக்களும், சாராயங்களும், தித்திப்புகளும் செய்தும், மரத்துப் பிசின்களைக்கொண்டு வர்ணங்களும் வார்னீஷ்களும் செய்தும், தொழிலை அபிவிர்த்திசெய்யலாம். பூமியிலகப்படும் சில கற்களினாலும் களிமண்களினாலும் பாண்டங்களும் பீங்கான் முதலான சாமான்களும் செய்யலாம். பூண்டுகளினின்று சாயங்கள் எடுக்கலாம் இன்னும் இதைப்போன்ற எத்தனையோ வித விதமான தொழில்களையும் செய்வதற்கு நமது தேசத்திலிருக்கும் இயற்கைப்பொருள்கள் உதவும்.

மேற்கூறிய தொழில்களனைத்தையும் திறமையுடன் கற்றுக்கொடுக்கவும் மேல்பார்க்கவும் வெளிநாடுகளிற்சென்று இரசாயனநூல்பயின்று வந்த நமது சகோதரர்கள் அனேகருளர். அவர்களைக்கொண்டு நாம் பயிலவேண்டும். அவர்கள்



சொற்படி நமதுநாட்டில் கிடைக்கும் மூலாதாரப்பொருள்களை எவ்விதம் பற்பல தொழில்களில் உபயோகிக்கலாமென்பதை பரீக்ஷிக்க இரசாயன ஆராய்ச்சிச்சாலைகள் அமைக்க வேண்டும். பிற தேசங்களில் இவ்விதமுயற்சி பணக்காரர்களிடமிருக்க நமது நாட்டில்மட்டும் ஏன் தனவந்தர்கள் மன்போர் சுயநலமிகளாக இருக்கவேண்டும்? பணம் சம்பாதித்தற்கழகு அதைநல்லவழியில்செலவிடுதல்பொருட்டன்றோ?

தாய்நாடு ஏழ்மையினின்று மீளவேண்டியதற்கு நாட்டில்பிறந்த ஒவ்வொருவரும் முயற்சிக்கவேண்டும். தன் காரியத்தைமட்டும்பார்த்துக்கொண்டு கஷ்டப்படும் சகோதரர்கள் விஷயத்தில் அசட்டையாயிருப்பவன் மிருகத்திற்குச் சமானமாவான் என ஒருபெரியார் கூறியிருக்கிறார்.

ஆகவே பணக்காரர்கள் தங்கள் குழந்தைகளை வெளிநாடுகளுக்கனுப்பி அவர்கள் தொழிற் கல்விகற்றுவந்து நம் நாட்டில் தொழிற்சாலைகளை நிறுவவும், தொழிற் கல்விச்சாலைகள் ஏற்படுத்தி தொழில்முறையைக் கற்பிக்கவும் முன்வருவார்களானால் நமது வறுமை ஒருவாறுநீங்கும்.

தற்காலப்பாடசாலைகளில் சிறுவர்களுக்குத் தொழிற் கல்வியை சிறுவயதிலேயே ஊட்டும்படி ஏற்பாடுசெய்ய வேண்டும். இதுமிகவும் அத்தியாவசியம் என்பதை கல்வி இலாகா அதிகாரிகள் கவனித்து தொழிற்கல்வி விஷயத்தில் சிரத்தையெடுத்துக் கொள்வார்களானால் தற்போது எங்கும் நேரிட்டிருக்கும் வேலையில்லாத்திண்டாட்டம் ஒழிவதோடு நமது வறுமையும்நீங்கும். அதுகண்டு எதிர்கால உலகம் நம்மைப்போற்றும் என்பதில் ஐயமேயில்லை.

ஆசிரியன்.

---

கொழும்பில்
"சித்தன்" கிடைக்குமிடம்.
**P. M. R.** முத்துசாமி ரெட்டியார்,
87, மாதாகோவில் வீதி,
ஸ்லேவ் ஐலண்டு, கொழும்பு.

## நேயர்களே!

சித்தனுக்கு இத்துடன் முதல் ஆண்டு பூர்த்தியாகிவிட்டது. இரண்டாவதாண்டுத் துவக்கத்திலிருந்து அதிகப்படியான பக்கங்களுடனும் காதல் நிறைந்த கதைகளுடனும், வைத்தியர்களுக்குப்பயன்படும் பகுதியை அதிகப்படுத்தியும் பொதுமக்கள் யாவரும் பாராட்டக்கூடிய நிலையில் வெளிவருமாதலால் சென்ற ஆண்டில் ஆதரவளித்த வைத்திய சகோதரர்களும், மற்ற நண்பர்களும் "சித்தனை" ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

(மானேஜர்.)

தமாஷ்! தமாஷ்!

**101 101 101**

பேசும் படக்காட்சிக்கு
இன்றியமையாத அம்சமான
தமாஷ் பகுதிக்கு நமது **101** அல்லது 'அடியார் மகிமை' என்னும் நாடகமும் சேர்ந்துவிட்டால் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பெய்ததுபோலவே இருக்கும்.

விபரங்கட்கு எழுதவும்
மானேஜர், "சித்தன்"
பழனி.



# காகினாடபுரம்.

## ஓர் தேசத்தின் முற்காலத் தற்காலச் சரித்திரம்.

(கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.)

ஆந்திர பூமியில் "கோதாவரி மண்டலம்" என்று பிரசித்திபெற்றதோர் நகரமிருக்கிறது. "இராஜமகேந்திரவரம்" என்பது சாளுக்கிய ராஜ்யத்திற்கு இராஜதானியாய் பாரததேசத்துக் கீர்த்தியைப் பெருகச்செய்த பாக்கியம் பெற்றது. வனங்களடர்ந்த பிரதேசம். மலர்களும், கனிகளும் நிறைந்து உத்தியானவனமாய்ப் பிரகாசிக்கும் சிறப்புடையது. வேதாத்யாயன பாராயணர்களுக்கும், பண்டிதோத்தமர்களுக்கும் பிரசித்திபெற்றது. "பீடிகாபுரம்". பழமையான காலத்திலிருந்தே சூரர்கட்கும், கொடையாளிகட்கும் கல்வியை வளர்க்கும் வன்மையாளர்கட்கும், உறைவிடமானது. "பத்ராசலமும்", சீதாராம லட்சுமணர்கள் வனவாசம் செய்த பிரதேசங்களும் இம்மண்டலத்தைச் சார்ந்தனவேயாம். கோதாவரி மண்டலத்தில் புராணேதிகாச பிரசித்தமான புண்ணிய க்ஷேத்திரங்கள் அநேகம் இருக்கின்றன. இக்கோதாவரி மண்டலம் 2545 மைல் விஸ்தீர்ணமும், 1,50,000 ரூபாய் வருவாயும் உடையனவாய் ஆந்திரதேசத்துக்கு அலங்காரபூதமாக இருக்கத் தகுதிவாய்ந்ததுமாம். தொன்றுதொட்டே கவீச்சுரர்களுக்கும், பண்டிதமணிகளுக்கும் கொடைமடம் நிரம்பிய பிரபுக்களுக்கும் பிரசித்தியுடைய கோதாவரி மண்டலம், தற்காலத்தில் ஆந்த்ரதேசம். அரசியல்-காங்கிரஸ் விவகாரங்களிலும், வித்தையின் வியாபகத்திலும் முன்னேறியுள்ளது. 38-ம் தேசீய மகாசபையாகிய காங்கிரசும், வேறுபல சபைகளும் இங்கு வெற்றிகரமாய் நடைபெற்று உலகம் புகழ்ந்துபேசும் பெருமையும் பெற்றதென்றே சொல்லவேண்டும்.

கோதாவரி மண்டலம் புராணேதிகாசப் பிரசித்தமான பட்டினங்களை உடையதாய் இருப்பினும், காகினாடபுரம் மேனாட்டு வியாபாரத்திற்குக் கட்டுப்பட்ட புதிய நிர்மாணம் வாய்ந்தது. டச்சுக்காரர் ஜகன்னாதபுரத்தில் வர்த்தக சாலையை நிருபித்து வியாபாரத்தைத் தொடங்கினர்.

ஓர் ஒதுக்கான இவ்விடம், 1825-ம் ஆண்டில் நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் வசப்பட்டது. ஜகன்னாதபுரத்தில் டச்சுக்காரர்கள் விசாலமான வீதிகளை நகர அபிவிருத்திக்கு அனுகூலமாக நிருமித்தார்கள். ஆங்கிலத்துரைத்தனத்தார் முன்னும் பின்னும் ஆலோசியாமலே காகினாடபுரத்தை யதேச்சையாகப் பெருகும்படி விட்டுவைத்தனர். இக்காகினாடபுரம் பழமையில் ஆந்திரதேசத்துக்கு முதன்மையான ரேவுதுறைப்பட்டினமாய், பெருஞ்செல்வர்களுடைய பெருக்கத்தையும், வியாபார அபிவிருத்தியையும் பெற்றிருந்தது. சமுத்திரத்தில் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டுப் போனதிலிருந்து இந்நகரத்தின் செல்வலட்சுமி தன் பொலிவழிந்து அழகு குன்றினள். எனினும், பழமைச் சீரும், சிறப்பும் குறைந்திருப்பினும், தற்போதும் ஆந்திர நாட்டில் பிரசித்திபெற்ற பெரும்பட்டினமாக விளங்குகின்றது. காகினாடா 53,348 ஜனசங்கியையுடைத்தாய்க் கோதாவரி மண்டலத்துக்கு முதன்மை ஸ்தானமாக இருக்கின்றது. காகினாடா சென்ற பத்தாண்டுகளுக்குப்பின்னர் சிறிது தாழ்ந்த நிலையில் இருக்கிறதென்றே சொல்லவேண்டும். இப்பட்டினத்தில் யாத்ரீகர்கள் கண்டுகளிக்கத்தக்க அழகும், பெருமையும், அதிசயமும் நிரம்பிய பழமையான கட்டடங்களொன்றுமேயில்லை. சமீபத்தில் நிருமாணிக்கப்பட்ட "ரேவுதுறை" ஸ்ரீ பித்தாபுரம் மகாராஜா அவர்களால் ஆதரணையிலிருந்துவருகிற "அனாதைகள் சரணாலயம்". இது ஆந்திர தேசம் அனைத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் சரணாலயமாக (சரணாலயம்—அடைக்கல விடுதி) விளங்குகிறது. மற்றும் மகாராஜா அவர்கள் கண்காணிப்பிலுள்ள "கலாசாலையும்" நூதனமாகக் கட்டப்பட்ட தேவாலயமும், மல்லாதி சத்தியலிங்க நாயகர் அவர்கள் ஸ்தாபித்துள்ள "தர்ம சத்திரங்கள்" முதலியவைகளும் கண்டுகளிக்கக்கூடியதும், கவனத்தைக் கவரக்கூடியதுமான வனப்புகள் வாய்ந்தவைகளென்றே கூறவேண்டும். மற்றும் இங்கு தெற்கு, வடக்கு திக்குகளைப்போலவே பார்க்கக்கூடிய மாளிகைகளும், மசூதிகளும், தேவாலயங்களும் அபூர்வமாகவே இருக்கின்றன.



# உறுதி! உறுதி!

(ஸ்கெலிடன்)

செருப்பும் பூட்சும் காலுக்குறுதி
பருப்பும் நெய்யும் வயிற்றுக்குறுதி
வீடும் வயலும் ஜப்திக்குறுதி
தேர் விழாக்கள் செலவுக்குறுதி
நார் மடிகள் ஞானிக்குறுதி
சட்னி சாம்பார் இட்லிக்குறுதி
பட்னி கிடத்தல் கொள்கைக்குறுதி
பாலுஞ் சீனியும் 'காப்பி'க்குறுதி
தோலும் எலும்பும் தோட்டிக்குறுதி
சடையும் திமிருஞ் சண்டைக் தறுதி
கதையுங் கேள்வியுங் கட்டுரைக்குறுதி
சாமியுங் கடவுளுங் தளிகைக்குறுதி
மாமியும் நாத்தியும் வம்புக்குறுதி
கோவில் மடங்கள் கொள்ளைக்குறுதி
தாவுங் குதிரைகள் சண்டைக்குறுதி
கொள்ளும் நீரும் குதிரைக்குறுதி
எள்ளும் நீரும் இறந்தோர்க்குறுதி
அரங்கன் சந்நதி ஆழ்வார்க்குறுதி
குரங்குச் சேஷ்டை குழந்தைக்குறுதி
வெற்றிலை பாக்கு விருந்துக்குறுதி
சுற்ற பட்டம் காற்றுக்குறுதி
நாஸ்திக மதமே நாய்க்கர்க்குறுதி
ஆஸ்திக மெல்லாம் அந்தணர்க்குறுதி
கனியுங் கிழங்குங் கொழுப்புக்குறுதி
பனியும் வெய்யிலும் பறையர்க்குறுதி
கொடுக்கல் வாங்கல் வட்டிக்குறுதி

ஒடுக்கப்பட்டோர் உழைப்புக்குறுதி
பட்டா நாமம் தாசர்க்குறுதி
சட்டமறுப்பு ஜெயிலுக்குறுதி
எண்ணெய் ஸ்நானம் கண்ணுக்குறுதி
வண்ணான் பாட்டு பிளேட்டுக்குறுதி
பட்டம் பதவி பெருமைக்குறுதி
மட்டக்குதிரை வண்டிக்குறுதி
ஜப்பான் ஜர்மனி சண்டைக்குறுதி
ஒப்பாரியோ இழவுக்குறுதி
தேங்காய் பழங்கள் சாமிக்குறுதி
மாங்காய்ப் பிஞ்சுகள் வடுவுக்குறுதி
தீர்த்தம் மூர்த்தி யாத்திரைக்குறுதி
கீர்த்தனைப் பாடம் பஜனைக்குறுதி
நாயுங் கழுதையுஞ் சொல்லுக்குறுதி
பேயும் பூதமும் பயத்துக்குறுதி
தலப்புராணம் தபசிக்குறுதி
கலப்பு மணங்கள் காதற்குறுதி

(தொடரும்)

---

436-ம் பக்கத்தொடர்ச்சி.

காகிநாடா, பட்டினசௌகரியமும், கிராமசௌகரியமும் உடைத்தானதாய், வாசஞ்செய்வதற்குத் தகுதிவாய்ந்ததாய் விளங்குகிறது. பட்டின நிர்மாண நிபுணரான "மிஸ்டர், செட்டீஸ் துரை" அவர்கள் காகிநாடாவுக்குள்ள வசதிகளை நன்றாக அறிவித்துள்ளார். மகாத்மா காந்தி நகரத்தை ஆக்ரமித்துக்கொண்ட "எல்வின் பேட்டை" கெட்டிஸ் துரை அவர்கள் உபதேசப்பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டது. இது இப்பொழுது "காந்தி நகரம்" என்ற பெயரோடு அழகாக விளங்கிக் காண்போர்களுக்கு மனோகரமாயிருக்கிறது.

---



# மாதுளங்கனி.

(T. D. சுப்பிரமணியம்)

உண்மைத் தத்துவங்கள் ஊன்றிநோக்கும் திறனுடையோர்க்கு மிகச்சாமானிய வஸ்துக்களினின்றும்கூட தென்படும். அத்தகைய வன்மை எல்லார்பாலும் உளதாயினும் ஒரு சில இடங்களில்தான் அஃது மிகவும் விளங்குகிறது. அவ்வாறாய ஆத்மாக்களை நாம் அஞ்சலிசெய்தல் கடமையும் முறைமையும் ஆகும்.

எனக்கு சுமார் 9-வயது இருக்கும். ஆனால் வயதுக்கேற்ற சுறுசுறுப்பும், உற்சாகமும் எனக்கிருந்ததாக நினைவில்லை. அதன் காரணமே எனக்கின்னும் விளங்கவில்லை. எப்பொழுதும் நான் தனித்து இருக்கவோ, தனிப்பட எதுவொன்றையும் செய்யவோதான் என் மனம் இசையும். வீதியில் குழந்தைகள் விளையாடினால் அவர்களுடன் கலந்துகொள்வதில்லை. என்சகபாடிகள் என்னை மன்றாடி தங்களுடன் விளையாட வேண்டினால் எனக்கது வேதனையாயிருக்கும். "என்ன விளையாட்டப்பா வேண்டிஇருக்கு? பாடங்கள் இல்லையா?" என்றெல்லாம் பதில்கூறி அவர்களினின்றும் ஓடி மறைந்துவிடுவேன். சிற்சிலவேளைகளில் என்னை பலவந்தப்படுத்தினால் பேசாது இருந்துவிடுவேன். ஆதலால் சகஜமாக எல்லாரும் என்னை ஊமை, பித்தன் என்றெல்லாம் ஏசுவர். அவைகளை லக்ஷ்யமே செய்வதில்லை. என் விஷயத்தில் கருத்தாயிருப்பேன். எனக்குத் தனி இடங்களில் நானே ஏதேனும் பேசிக்கொள்ளவோ, பாடவோ, படிக்கவோ, சும்மா உட்கார்ந்தபடி சிந்தனையிலாழவோ வெகுப்ரீதி.

ஒருநாள் காலைநேரம். என்னசொல்வேன் என் மனம் யந்தகாசமுற்றது. என்னையறியாமல் என்னுள் ஏதேதோ

உல்லாசமான உணர்ச்சிகள் எழலாயின. உடனே எங்கள் வீட்டுப் பின்புறத்தைநாடினேன். அங்கேநான் ஓர் மாதுளஞ் செடியைக்கண்டேன். அதைக் கண்டேனே இல்லையோ என் மனம் "கிடு கிடு" என நடுங்கியது.

சிறிது நேரம் தலைகுனிந்து கீழே நோக்கியவண்ணம் சிந்திக்கலானேன். என் பழய நினைவுகள் எழலாயின. சென்ற வருடம்வரை, அம்மரத்தைப் பாராட்டிப் பாதுகாத்துவந்த என் பாட்டனார் இல்லை. கவனிப்பாரின்றி அது ஓர் தாயற்ற குழந்தைபோல குற்றுயிர் கூடுடன விளங்கியது. சிறு கிளைகள் பெரும்பாலும் காய்ந்து கிடந்தன. இலைகள் மிகவும் கொஞ்சமாய் இருந்தன. தூர இருந்துபார்த்தால் அது ஓர் மாதுள மரம் என்றுகூடச் சொல்வது இயலாது. வயதான மரம் ஆதலால் பட்டுப்போன மரம்போலவும் தென்பட்டது.

"உன் நல்ல வயதுகாலத்தில் எத்தனை பழங்களைக் கொடுத்திருக்கிறாய். ஐயோ! உன்கதி ஏன் இப்படியாயிற்று. நீ பழம் தருவதை நிறுத்தியதால் உன்னை யாரும் கவனிக்க வில்லையா? இல்லையேல் எவரும் கவனிக்காததால் பழம் கொடுப்பதை விட்டனையா? உன் நாயகன் (என் பாட்டனார்) இல்லையென்று "என் தலைவனுக்காகாத பழங்கள் பின் யாருக்கு" என வெறுத்து காய்ப்பதையே நிறுத்திவிட்டாய் போலும்! உன் தலைவனது அன்பான பேரன் நான்! நீ யொரு பழம் எனக்கிப்பொழுது தருவாயேல் உண்மையாய் நீ உன் தலைவன்மீது அன்புகொண்டிருந்தாய் எனக்கூறுவேன்" என்றெல்லாம் எண்ண எண்ண என் உற்சாகமெல்லாம் பறந்து போய்விட்டது. சிந்தனையில் நெடுநேரம் மூழ்கினேன். எவ்வளவுநேரம் அவ்வாறு இருந்தேனோ தெரியாது. பிறகு மனம் முறிந்தவன்போல என் கையை ஓர் மரக்கிளைமேல் வைத்து அதை மெல்ல அசைத்தவண்ணம், சிறிது பாட எண்ணினேன்.

எப்பொழுதும், என் உற்சாகம் மேலிடும்போதும் சிறிது விசனம்வந்து கப்புகின்றகாலத்தும் என்னையறியாது நான் பாடுவது வழக்கம். முருகனையும், இராமனையும் என் மனம் துதித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம், கீழே நோக்கிய எனக்குமனக்கண் இருந்தவிசனம்யாவும் ஓடும்படியாய் ஒன்று



தென்பட்டது. என்னே! மனிதவாழ்வு! இன்பமும் துன்பமும் மாறிமாறி வருகின்றன. இதுவே உலகின் இயற்கை! யாவும் இன்பமயமே!

என் விசனத்தை விசித்தள்ளியது, பக்கத்தே இருந்த சப்பாத்திப்புதருள் சென்று "தள தள" வென செழித்திருந்த அம்மாதுள மரத்தின் ஓர் சிறு கிளையே. அச்சிறு கிளை கீழேசாய்ந்து சப்பாத்திப்புதருக்குள்சென்றிருந்தமையால் அதனை எவரும் கவனிக்கவில்லை. நன்றாய்த் தளிர்த்து, பூ, பிஞ்சுகளுடன் அது விளங்கியது என் மட்டிலா ஆனந்தத்திற்கு காரணமாயிருந்தது. அக்கிளையை ஆட்டினேன். ஆ! என்ன ஆச்சர்யம்! என் மனம் மலர்ந்தது; என்னை நான் நம்பவேயில்லை. கண்களைத் தேய்த்தேன். நன்றாய் சப்பாத்தியை விலக்கிக் கீழே கூர்மையாகப்பார்த்தேன். உண்மை தான்! புதருள் இருந்தமையால் எவரும் பார்க்கவில்லை. அதனால் அக்கிளையில் உண்டான பூ, பிஞ்சாகி, காயாகி, முற்றி நன்றாய்ப் பழுத்திருக்கிறது. வெகு அழகான பழம்! பேஷ். பெரிய நல்ல பழம்! அம்மாதிரி இப்பொழுதுஓர் பழம் வாங்கவேண்டுமானால் 4-அணா பெறும். சிரமப்பட்டு அதனைப் பறித்து என் வேஷ்டியில் மூடி எடுத்துக்கொண்டு ஓடினேன். ஒருவருக்கும் கொடாமல் நானே அதைத்தின்று விடவேண்டுமென்ற ஆத்திரம் அதிகரித்தது. அதனால்சற்று தூரத்திலிருந்த எங்கள் தோட்டத்திற்கு ஓடி அங்குள்ள ஓர் சாலையின் திண்ணைமீது போட்டிருந்த கட்டிலின்மீது உட்கார்ந்தேன். அப்பழத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு மெள்ளநோக்கினேன். என்ன ஆனந்தம்! ஆ! இது வரை அத்தகைய ஆனந்தம் அடைந்ததே இல்லை. ஆனால் அந்நிகழ்ச்சியை இப்பொழுது நினைத்தாலும் அதனின்றும் பன்மடங்கான ஆனந்தம் பொங்குகிறது.

நன்றாய் அப்பழத்தைப்பார்த்துவிட்டு அதனை உறிக்க எத்தனித்தேன். அப்பா! அச்சமயம் "பொத்" என்று சுமார் 10-அடி தூரத்தில் என்முன் ஏதோ கூரையிலிருந்து விழுந்தது. உடனே அது உயர ஆரம்பித்தது. அப்படியே அலறி அடித்துக்கொண்டு பழத்தைமட்டும் விடாமல் வெளியே மூடி தூரப்போய்நின்றுகொண்டு "பாம்பு பாம்பு"

என்று கத்தினேன். எவரையும் காணோம். நிர்மானுஷ்யமாயிருந்த அத்தோட்டத்தில் எனக்கு இருக்கமுடியவில்லை. வீட்டிற்கு ஓட எண்ணினேன். எந்தப்பழத்தைக்கண்டு தனியாயிருந்து நானே உண்டு அனுபவிக்கஎண்ணினேனோ அந்தப் பழத்தைக்காணவும் எனக்கு அருவருப்பு உண்டாயிற்று.

"பாழும் பழமே! என்னை மயக்கிவிட்டாயே! கேவலம், உன்னால், என் அருமைத் தமக்கையையும், அண்ணன், தாயார் முதலியவர்களையும் விட்டு தனியே சுயநலம் மிக்கோனாய் தின்பதற்கு எண்ணிவிட்டேனே! ஐயோ! நான் கெட்டேன். எல்லாருடனும் சாப்பிட்டால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும். இதையெல்லாம் விட்டுவிட்டு பெருவயறு படைத்தவனைப்போல் தனித்து நானே உண்ணவும் துணிந்தேனே. அவ்வாறு நான் செய்வது தவறு என்பதைக்காட்டி என்னை நல்வழிப்படுத்தவே எனது ஆண்டவன் "பாம்பின் வடிவமாய்" வந்தானோ! என்று எண்ணமிட்டவனாய்ப் பழத்துடன் வீட்டை அடைந்தேன். அங்கு எல்லோரிடமும் ஆதியோடந்தமாய் பழம் கிடைத்தது முதல் வீட்டிற்கு மனம் மாறி வந்தவரை கூறி என் துர் எண்ணத்தையும் சொல்லி என்னை மன்னிக்குமாறுவேண்டினேன். அவ்வமயம் என் கண்களில் நீர் அரும்பிற்று. எல்லோருமாய் பழத்தை உரித்துச்சாப்பிட்டோம்.

சாங்கோபாங்கமாய் இவற்றைக் கேட்டுவந்த நோயாளியாயிருந்தஎன் மைத்துனர், "அப்பா! என் வேதனைவேளையில் உன்னால் தெய்வ ஒளியை உணர்ந்தேன். உன்னால் உய்ய வழியும் பெற்றேன். இத்தருவாயில் இவ்வரும் பெரும் உதவி செய்த புண்ணியனே! உனக்கு ஆண்டவன் சர்வ மங்களம் அளிக்கட்டும். தெய்வம் ஒன்று உண்டு. "அன்பு கொள்." "தீமை நினையாதே" என்று கூறிய பொன்மொழிகள், இன்றும் என் செவிகளில் ஒலிக்கின்றன. இன்பம் அளித்து ஆறுதலையாய் உள்ளன. எல்லோரும் இன்புற்று இருப்பதுவே எந்தன் சுகம்.



# தியாகம்.

(R. P. ராஜன், பொருளூர்.)

கார்காலத்தின் மேகத்தினாலும் மிகுந்த மழையினாலும் சந்தியாகாலம் இருள் சூழ்ந்திருந்தது. பயங்கரமான சப்தத்துடன் சுழல் காற்று வீசியும் பச்சைப்பசேலென ஒன்றோடொன்று இணைந்து பின்னி ஒரே முடிவற்றதாய், இடைவெளியின்றி, கதிரவனின் கிரணங்களும் நுழைவதற்குச் சிறிதும் இடமின்றிச்செறிந்திருந்த விசாலமான துங்கபத்ரா நதியை அடுத்துள்ள அரண்யம் சுழல் காற்றினால் அசைவுற்று, 'உஸ்' என்ற சப்தத்துடன் அலைமேல் அலைஎறிந்து அலப்பிய வண்ணமாயிருந்தது. காதைத்துளைக்கும் இடியும், கண்ணைப்பறிக்கும் மின்னலும், அந்த முடிவற்ற காட்டில் வாழும் கொடிய மிருகங்களையும் நடுங்கி அலறச்செய்து, தமது அன்பின் குஞ்சுகளையும் மறந்து, அரிய கூட்டையும் துறந்து, நனைந்த சிறகுகளால் பறக்க இயலாது தவிக்கும் அளவிலாத பக்ஷிகளின் நாதத்தினாலும் வனபூமி ஒலிக்கத் தொடங்கியது. கன்னங்கரேலென எங்கும் சூழ்ந்து பூமியின் கர்ப்பத்திலுள்ள அந்தகாரத்தையும் பழிக்கச்செய்யும் நள்ளிருளில் அரண்யத்தின் உட்புறத்திலுள்ள மரங்களையும் கொடிகளையும் தழுவிக்கொண்டு, இந்தப் பூங்கொடி திசை அறியாது ஏன் தவிக்கவேண்டும்? சந்தியாகாலமாயிருந்தும் நள்ளிருள்போல் தோன்றிய இந்தக்காடாந்தகாரத்தில் தன்னந்தனியாக வந்துகொண்டிருந்த ஒரு பெண்மணிக்கு என்ன மனோதைரியம் இருக்கவேண்டும்! திடீரென்று தடதடவென மழை கொட்டத்தொடங்கியதால் அவளது மெல்லிய சரீரம் குளிரினாலும், பயத்தினாலும் வெடவெடத்தது. ஆ! சந்திரா! இதோபார்! மழை வலுவிழந்து, கரிய மேகங்களினால் மூடியிருந்த வானம் வரவர வெளுத்து வருகிறது. பூங்கொடிகளையும், அடர்ந்த மரங்களையும் சுவராகவும், பசும்புல்லைக் கம்பளமாகவும் கொண்ட இந்த அரண்யத்தின் தரையில் சிறிது அமருவாயாக; உமது உடலிலுள்ள கந்தையைப்பிழிந்து ஈரம் துவட்டு, எத்துன்பம் வரினும் அஞ்சாதே அம்மா! என்று கூறுவனபோல் மரங்களில் குரங்குக்

கூட்டங்கள் கூச்சலிட்டன. பயத்தினால் அலறிக்கொண்டிருந்த பறவைகள் பொழுது விடிந்துவிட்டது என்பதைக் காட்டி இன்னிசை எடுத்துப்பாடின. கொடும் குளிரினாலும், அளவிலாத பயத்தினாலும், மூர்ச்சையுற்றுத் துவண்டு கிடந்த அம்மெல்லியலாள் மனதில் அவ்வன பூமியின் நாதம் இருவகைக் கிளர்ச்சிகளை மூட்டிவிட்டது. ஒன்று வியர்த்தமான மனோரதம்; மற்றொன்று துணையின்றி வேதனையில் ஆழ்ந்து தோன்றும் காதலின் அமிர்தஸ்பர்சம்.

விஜய நகரத்தின் சமீபத்திலுள்ள ராமநகரத்திற்குக் கொஞ்சதூரத்தில் சந்திராவின் கிராமம் இருந்தது. விசாலமான துங்கபத்ரா நதியுடன், நாலைந்து சிற்றாறுகள் அங்கு கலக்கின்றன. இதற்கு இன்னும் கொஞ்சதூரத்தில் அடர்ந்த காட்டின் இருண்டகோடு. சந்திரா அச்சிறு கிராமத்திலேயே பிறந்து வளர்ந்தவள். குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்தவள். ரத்னதாஸன் தமது ஒரே மகளை மிக அன்புடன் வளர்த்துவந்தான். இவளுக்கு இன்னும் சரியாகப் பதினெட்டுவயது முடியவில்லை. விண்ணுலகத்தினின்றும் சபிக்கப்பெற்ற, இம்மண்ணில் பிறந்த இணையற்ற தெய்வமங்கையெனத் திகழ்ந்தாள். அவளது லாவண்யமும், புத்திகூர்மையும், பளபளப்பும், சுறுசுறுப்பும் காண்போர் உள்ளங்களைக் கவர்ந்தன. தைரியமும், கம்பீரமும் கண்ணுற்றவரின் மனதிற்கு அச்சத்தைக் கொடுத்தது. பொழுதுபோகாவிடில் சந்திரா நதிக்கரைக்குச் சென்றுவிடுவாள். படகுகள் இங்குதான் எதேஷ்டம். இருகரையும் புரண்டு தெளிந்து, பரந்து அலையெறிந்து செல்லும் அவ்வழகிய நதியின்மேல் படிந்த நீருண்ட மேகத்தின் சாயையைக்கண்டு மனம் மகிழ்வாள். நதியின் பிரவாகத்தில் அலைகள் மோதுவதையும், வேகமாய்ச் செல்லும் படகுகளால் மோதப்பட்ட ஜலம் திரளாகத்திரண்டு எழுவதையும், கண்ணுற்றுச் சந்தோஷிப்பாள். நள்ளிரவு; ரத்னதாஸனுக்குத் தூக்கமே வரவில்லை. அவன் தனது சிறிய குடிசையைவிட்டு அருமை மகளுடன் குளிர்ந்தகாற்றுவாங்க நதிக்கரைக்குச்சென்றான். கரையை அடைந்ததும் ஏதோ மணலில் உராயும் சப்தம் கேட்டது. காதைசரியாகக் குவித்துக்கொண்டு நதியை ஊடுருவிக்கவனித்தான். அந்த காடாந்தகாரமான இருளில் ஒரு



பெரிய படகு வேகமாக நதியில் சென்றுகொண்டிருந்தது. என்ன ஆச்சரியம்! ரத்னதாஸன் தனது கண்களையே நம்ப முடியவில்லை. பார்த்துக்கொண்டு இருக்கையிலேயே படகு போனவிடம் தெரியவில்லை. ஐயையோ! முழுகிவிட்டதே அப்பா! என்று சந்திரா தலையின்மேல் கைவைத்து அலறினாள். ரத்தினதாஸன் நதியில் பாய்ந்தான். அந்தக்காடாந்தகாரத்தில் கரையினருகிலேயே ஒருஉருவம் தென்பட்டது. அடுத்தநிமிஷம் மூர்ச்சையாகியிருந்த அழகிய வாலிபனுடன் ரத்னதாஸன் கரைசேர்ந்தான்.

நான் உங்களுக்கு ரொம்பவும் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்தோ! என்னுடன் வந்த எல்லோருடைய வாழ்வும் முடிந்துவிட்டதே! பிரவாசமாக ஓடும் நதியில் இறக்கும் தறுவாயிலிருந்த என்னை உங்கள் வீட்டிற்குக்கொண்டுவந்து உயிரைக் காப்பாற்றினீர்களல்லவா! இந்த ஜென்மத்தில் உங்களுக்கு வேறு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் என்று கண்ணீர்சிந்திக்கொண்டே கூறினான் ராமேசம். வீட்டு வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்த சந்திரா தலை நிமிர்ந்தாள். அது என்னவோ அவளையுமறியாமல் கண்களில் கண்ணீர் வந்து நிறைந்தது. அவனுடைய உருவம் அவளது மனதிலிருந்து விலகமாட்டேனென்றது. ஒரு முறை அவனை உற்றுநோக்கிவிட்டு, சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள். மாலைமாலையாக வடிந்த கண்ணீரை அவன் அறியாமலே துடைத்துக்கொண்டாள். “சந்திரா! என்னை மன்னித்துவிடு; நீ பார்த்த அந்த ஒரு பார்வையே எனக்குப் போதுமானது. என் உயிர் உள்ளவரை உன்னை மறக்க மாட்டேன்; இன்று முழுவதும் என்னுடன் நீ பேசிக்கொண்டிருந்தபோதிலும் என் மனம் அவ்வளவு சந்தோஷப்பட்டிருக்காது. எனக்கு விடைகொடு கண்ணே! ராமநகரத்திற்குப்போய் வருகிறேன். என் ஊர்......” என்று கூறும் போதே அவனது நெஞ்சம் படபடத்தது. சந்திரா ஒருகணம் தயங்கினாள். சுழல்காற்றில் அகப்பட்டுத் தத்தளிக்கும் கப்பலைப்போல் அவள் மனம் தத்தளித்தது. “இன்று ஒரு நாள் இருந்துவிட்டுப் போங்களேன்; இதற்குள் போகிறீர்களே” என்று சொன்ன வார்த்தைகூட நன்றாகவே காதில் விழவில்லை. வெட்கத்தால் தலையைக் குனிந்துகொண்டாள்.

"இம்முறை மாத்திரம்-இந்த ஒரு முறை மாத்திரம்-அவளிடம் நெருங்கிச்சென்று விடை பெற்றுக்கொள்வேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு ராமேசம் அவளை நெருங்கினான். "எனக்கு....விடை...கொடு...." என்று நாக்குழறக் கூறினான்.

"போய்வாருங்கள்; போய் சீக்கிரமே திரும்பி வாருங்கள்" என்று அரைமனதுடன் கூறினாள் சந்திரா. அவளது வதனத்தில் கவலையும், அவ்வழகிய வாலிபன் பேரில் அவளுள்ளத்தில் உதித்த காதலின் சின்னமும் தோன்றியது. விடைபெற்றாகிவிட்டது. இருந்தும் ராமேசம் அசைவற்று நின்றான். சந்திராவினாலும் நகரமுடியவில்லை. அவனது கால்கள் கனத்தன. முடிவில் சமாளித்துக்கொண்டு கண்ணீருகுத்தவண்ணம் காதல் நிறைந்த கண்களுடன் சீக்கிரமே திரும்பி வருவேனென்றான். பறவைகளெல்லாம் தமது குஞ்சுகளைத்தேடிப்போகும் சாயங்காலவேளையில் ராமேசம சந்திராவின் வீட்டை விட்டு வெளியே சென்றான்.

சந்திராவின் வீடு பாழடைந்துவிட்டதுபோல் தோன்றியது. ரத்னதாஸன் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறான். உற்றார் உறவினரில்லாத தமது வயதுவந்த அருமை மகளை விட்டுவிட்டுச்செல்ல எப்படித்தான் அவன் மனம் துணிந்ததோ! மகளை அருகில் அழைத்தான். குழந்தாய்! நான் இவ்வளவு வயதிற்கும் ஒரு நாளாவது நோய்வாய்ப்பட்டு வருந்தியதில்லை. தாயில்லாக் குழந்தையாகிய உன்னை தன்னந்தனியாக விட்டுவிட்டுப்பாவி செல்லுகிறேன். நுரையிலுள்ள கொப்புளங்களின் ஸ்தானம் எங்கிருந்தால் என்ன? கிழக்குக்காற்று மேற்கே அடிப்பதும், மேற்குக்காற்று கிழக்கே அடிப்பதும், காற்றின் தன்மையேயன்றோ! மகளே! நீ காதலிக்கும் மணமகனை மணந்து இன்புற்று வாழ்வாயாக; இது என் மனப்பூர்வமான ஆசீர்வாதம் என்று தன் மகளை அணைத்துக்கொண்டே ரத்னதாஸன் கண்ணீர் சொரிந்தான். சந்திரா கோவென்று கதறிய வண்ணம், தந்தையின் கால்களைக்கட்டிகொண்டே தரையில் விழுந்தாள். மூர்ச்சைதெளிந்து எழுந்ததும், ஆவலுடன் தன் தந்தையை நோக்கினாள். வெறும் பிணம்தான் மிச்சம். சந்திரா தன்



னையும் மறந்தாள். இந்தப்பாழும் உலகத்தில் ஒரு போக்கிடமுமின்றித் தன்னந்தனியாக, நாமொருவள் இருக்கிறோமே என்ற நினைவு சிறிதேனும் அவளுக்குஇல்லை. பித்துப்பிடித்தவள்போல் தனது எண்ணெய் இல்லாத கூந்தலை இரு கைகளாலும் பிய்த்துக்கொண்டாள். மெய்யில் நல்லாடையும், வயிற்றிற்கு நல்லுணவுமின்றி, அநிர்வசனீயமான ஒளி வீசும் சௌந்தர்யம் ஆயிரம் கந்தல் நிறைந்த ஆடையின் நடுவில் இருந்தும் பிரகாசித்துக்கொண்டிருந்த காந்தம் மங்கினவளானாள். மறுநாள் பொழுது விடிந்தது. தமது தந்தைக்குச்செய்யவேண்டிய சடங்குகளெல்லாம் முடிந்ததும், சந்திரா ராமநகரை நோக்கிப்பிரயாணமானாள். தமது காதலனைக்கண்டு சங்கதியைக்கூறும் வரையில் அவள் மனதிற்கு நிம்மதி ஏது? இவர்கள் கிராமத்திலிருந்து ராமநகரம் செல்லவேண்டுமானால் நதியைக்கடந்தே செல்லவேண்டும். இல்லையேல் நதிக்கரையை அடுத்துள்ள இருண்ட காடுகளை தைரியத்துடன் வழியறிந்து சுற்றிச்சென்று ராமநகரை அடையவேண்டும். படகுக்காரனுக்குக்கொடுக்க சந்திராவிடம் பணம் ஏது? ஆகவே இருண்ட காடுகளைத்தாண்டி, தமது காதலனைக்காண்போமென மிகுந்த ஆவலுடன் செல்லும்போதுதான் ஆரம்பத்தில் கூறியபடி சகிக்கமுடியாத இன்னல்களை அனுபவித்தாள். அப்போது அதிகாலை நாலரை மணி இருக்கும். குளிரினாலும் பயத்தினாலும், உடலில் ஜலம் சொட்டச்சொட்ட, சந்திரா கால் சென்றவழியே சென்றுகொண்டிருந்தாள்.

"ஹா சந்திராவா என்னைத்தேடிக்கொண்டு வந்துவிட்டாயா என் கண்ணே! உன் வரவு நல்வரவாகுக; ஏன் இந்த சோபாவில் உட்காரலாமே; உன் தந்தை சௌக்கியமா? அதிகாலையிலேயே எனக்காக எவ்வளவு துன்பங்களை அனுபவித்து வந்தாயோ?" என்று ராமேசம் அவளை ஆவலுடன் வரவேற்றான். அவளது இரு கரங்களையும் பற்றிக்கொண்டு மூச்சுவிடாமல் பேசலானான். சந்திரா விம்மிவிம்மி அழுதுகொண்டே தந்தை இறந்ததைக் கூறினாள். ராமேசமும் சிறிது நேரம் அழுது துக்கித்தான். அவனது வீடு பெரிய மாளிகைபோல் காட்சி அளித்தது. விசாலமான அறைகளை

நின்றாள். அவள் தேகம் உள்ளம் இரண்டும் உணர்ச்சியற்றுச் சிலைபோல் மாறிவிட்டதாகத் தோன்றியது. சிறிது நேரத்தில் தன் சுய அறிவு வரப்பெற்றதும் அவள் மனதில் தோன்றிய புதிய மாறுதலைக்கண்டு திடுக்கிட்டாள். ஆம்; இவர் குலம்—ஜாதி—பெருமைகளெல்லாம் எவ்வளவு மேன்மையானவை; நம் காதலை இவர் அங்கீகரிப்பாரா? ஆ கடவுளே! இப்பெண்மணியைக் கைவிட்டுவிட்டீரா என்ன?

"நீங்கள் அன்று என்னை விட்டுப்பிரிந்து வந்ததும், வெளிக்கண்ணில் தோன்றியதைவிட என் மனக்கண்ணில் வெகு அழகாக வாசம் செய்தீர்கள். இப்போது தெய்வம் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறது." "இந்தா; இவள் உன்னைச் சேர்ந்தவள்; ஏற்றுக்கொள்" என்பதே அதன் கட்டளை.

திடீரென்று ராமேசனின் முகம் மாறுதலடைந்தது. தூக்கிவாரிப்போட்டவனாய் "ஆமாம் சந்திரா! உங்கள் தெய்வம் எது?" என்றான். "கடவுள் ஒருவரே உண்டு. உங்கள் தெய்வமே என் தெய்வமும்" என்று அவனது காலடியில் விழுந்து அழுதுகொண்டே சந்திரா கூறினாள். பாவம் அவளது உள்ளத்தில் உண்டான உணர்ச்சியின் பிரவாகத்தினால் வார்த்தைகள்கூட வெளிவரமுடியாமல் நெஞ்சில் அடைத்துக்கொண்டன.

"அது பொய்; பொய்; நீசொல்வது உண்மையேயல்ல" என்று ராமேசம் மெதுவாய்க்கூறினான். அவன் முகத்தில் தோன்றிய புதிய மாறுதலைக்கண்டு சந்திரா திடுக்கிட்டாள். தலைகுனிந்த வண்ணம் இருந்த ராமேசம் உங்கள் ஜாதி என்ன? என்று விசனத்துடன் சொல்லிக்கொண்டே மௌனமானான். நம்பிக்கை இழந்த சந்திரா தன் கோமளமான கைகளை அவன் தாடையில் கொடுத்து தலையைத்தூக்கினாள். "அன்பரே! கைவிட்டுவிடாதீர்; காதலுக்கு மதமென்றும் ஜாதி என்றும் உண்டோ? இது என்ன! கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன் என்கிறீர்களே என்நாதரே! தங்களையே நம்பியுள்ளேன்; ஒரு வகையுமறியேனே" என்று அழுதுகொண்டே அவன் கால்களின்மீது சாய்ந்தாள்.



"இனி என்னால் ஒன்றும் செய்ய இயலாது; நான் உங்கள் ஜாதியானல்ல; சந்திரா! நான் ஒரு பிராமணன்."

"ஆ! இது தருமா; இது தருமந்தானா; இப்படி முடியுமென்று நான் எண்ணவே இல்லையே..."

"நான் என்ன செய்வேன்? என் சுபாவப்படிதானே நடக்கமுடியும்; சந்திரா! என் ஜாதி உற்றார் உறவினர் ஒருவரும் இதற்குச்சம்மதியாரே" என்று ராமேசம் கண்ணீர் சொரிந்தான்.

"நல்லது; அன்பரே! எனக்குவிடைகொடுங்கள்; நான் செல்லுகிறேன்; ஓ! என்னால் சகிக்க முடியவில்லையே; நான் தங்களிடம் உண்மை அன்புகொண்டிருந்தேன். அவ்வன்பு நிறைவேற உங்களுக்குப்பிரியமிருந்தும், பாழும் மூடத்தனத்தினால் அநியாய வார்த்தையைச் சொன்னீர்கள். என்னைத் தள்ளினீர்கள்; தந்தை இறந்தார்; வகையறியாத பாவியானேன்; பகவான்மேல் ஆணை..." என்று அவன் கால்களைக்கட்டிக்கொண்டே சந்திரா அழுது புலம்பினாள். ராமேசம் குமுறி அழுதுகொண்டே கீழே விழுந்தான். பின்பு நடந்தது அவனுக்கு ஒன்றுமே தெரியாது.

அதே பழைய ஆரண்யம். பூங்கொடிகளிலுள்ள மலர்கள் உதிர்ந்து நாலாபுறமும் மணங்கமழ்ந்தது. நதிக்கரையிலேயே ஓர் அழகிய பெண்மணி வாடிய முகத்துடன் சென்றுகொண்டிருந்தாள். ஒரு இடத்தில் சிறிது அமர்ந்து தன்னை ஆசுவாஸப்படுத்திக்கொண்டாள். பின்பு தன் இரு கரங்களையும் கூப்பி வானத்தை நோக்கி நமஸ்கரித்துவிட்டு, ஆனந்தமாகத் துங்கபத்ராதேவியின் பாதங்களைத்தழுவலானாள். அன்று நதிக்கு வந்த ராமேசம் தன்னைமறந்து புலம்பினான். நிர்ப்பந்தத்தினாலேயே பாவி உன்னைப்போகுமாறு செய்தேன். கடவுளே உன்னை மறுபடி என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பார்! ஆ! சந்திரா! நீ வருவாயல்லவா? இந்த மூடனுக்காக எத்தகைய தியாகம் செய்தாயோ? அறியேன்! கண்மணி! பாவியைத்தேடி மறுபடி வருவாயா? பிரவாகமாக ஓடும் துங்கபத்ரா நதியுடன் ராமேசனின் கண்ணீர் அருவியும் சேர்ந்து மறைந்தது.

# மாதர்களின் மறுமணம்!

( புதுவை, R. S. ராஜலெக்ஷிமி. )

(அடைக்கலமே—என்ற மெட்டு.)

இராகம் அரபி, தாளம் ஆதி.

பல்லவி

ஆதரிப்பீர் ஆதரிப்பீர்
அவனியின் மீதினிலே அரிவையர் மறுமணம் (ஆ)

அனுபல்லவிகள்

அன்றுதான் பெற்றோர்கள் செய்த கல்யாணம்
அணங்குகளிருதயம் துளைத்திடும் பாணம்
இன்று அதனையெண்ணிப் பார்த்திடில் நாணம்
இளமை மணமிகவும் தீதெனத் தோணும் (ஆ)

சின்ன வயதினிலே நலங் கெட்டு
சிறியபெண்கள் நல்வாழ்க்கையை விட்டு
மண்ணில் மிகத்துன்பத்திற்குள் பட்டு
மாறாத்துய ரடைகுறார் மனந் தட்டு (ஆ)

ஆயுட் கைதிகளாக ஆக்கிய விந்தை
அவனியி லெங்கினும்அரியும்இன் னிந்தை
மேவியே விதவையர் உருகுறார் சிந்தை
மேட்டிமையுடன் கண்டு களிப்பார்தாய் தந்தை (ஆ)

விதவைத் துயரொழிய விரும்பினெல்லோரும்
விரைந்து ழைத் தாலவர்க்கு விடுதலை நேரும்
இதமாய் மன மகிழ்ச்சி என்றுமே சேரும்
இழிவான பழிச்சொற்கள்இருக்காது கோரும் (ஆ)

18925



# மாதர் பகுதி.

## தக்ஷணத்தில் ஸ்திரீகள் நிலை.

(தோழர், A. B. ஆதித்தர்.)

உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஸ்திரீகள் உன்னத நிலைமையை அடைந்துகொண்டிருக்கின்றனர். ரஷ்ய தேசத்துஸ்திரீகள் நிலைமையைப்பற்றி முன்னொரு கட்டுரையில் மொழிந்துள்ளோம். நமது ஆசியா கண்டத்திலுள்ள ஜப்பான் தேசத்தில் தொழிலாளப்பெண்கள் வாழ்க்கை முறைகூட எவ்வளவோ உயர்ந்துவிட்டது. ஜப்பானிலுள்ள ஸ்திரீ தொழிலாளர் இந்தியத் தொழிலாளரைவிட தேக வலிமையுடையவர்களாகவும், கையில் அதிகக் காசுடையவர்களாகவும் இருக்கிறார்கள். அனேகம் பருத்தி ஆலைகளில் பெரும்பாலானதொழிலாளர் பெண்களே! ஆலைக்கு வருமுன் அவர்கள் எழு வருஷகாலம் கட்டாயமாகக் கல்வி போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். 15வயதுவரை பெண்களைவேலையில்அப்ரெண்டிஸ்களாகச்சேர்த்து 6 மாதம் பயிற்சியளிக்கின்றனர். பிறகு அவர்களை முறைப்படி தொழிலாளர்களாகச் சேர்த்துக்கொள்கின்றனர். பெண்கள் இந்தவிடத்தில் வேலை செய்கையில் பிற்காலவாழ்க்கைக்கான நல்லொழுக்கங்கள் பலவும் கற்பிக்கப்படுகின்றனர். ஒழிந்தநேரத்தில் கணிதம், சமையல் வேலை, சங்கீதம் முதலியன அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. அதுபோகட்டும்; நமக்கருகாமையிலுள்ள இலங்கையைப் பாருங்கள். அங்கும் பெண்கள் வாழ்க்கை உயரியதாகவே இருக்கிறது. இலங்கை ரயில் வண்டிகளில் பிரயாணம் செய்யும் ஆண்கள் பெண்களைக் கண்டதும் எழுந்து அவர்களுக்கு இடம் கொடுத்து நிற்கும் மரியாதையைக் காணலாம்.

இந்தியாவிலோ, அதிலும் இத்தக்ஷணத்தில் ஸ்திரீகள் நிலையைப்பற்றி எழுதுவதற்கு எமது பேனா கூசுகிறது. இங்குள்ள இந்துப் பெண்கள் தாய்தந்தையரின் இஷ்டத்தைப்பொருத்தே விவாகம் செய்துகொடுக்கப்படுகிறார்கள்.

பெண்ணுக்கு மணமகனைப்பற்றியோ, அவன் சுற்றத்தார்களைப்பற்றியோ விவாகத்துக்குமுன் ஒன்றுமே தெரியாது. இவ்வாறு செய்துகொடுக்கப்படும் பெண்கள் ஒரு மாட்டைப்போலவோ, அடிமையைப்போலவோ அல்லது ஒரு அபூர்வமான பொருளைப்போலவோ கருதப்படுகிறார்கள். கல்யாண சுகத்தில் அவள் காதலின்பத்தை அனுபவியாமல் காமவேட்கையே தணிக்கப்படுகிறாள். புணர்ச்சியைத்தவிர அவள் வேறொரு சுகமும் அறியாள். பரஸ்பரம் தம்பதிகள் அறிமுகமாகாது செய்யப்படும் கல்யாணத்தில் வேறெவ்வித வாழ்க்கையை எதிர்பார்க்கமுடியும்? இவ்வாறு வாழ்வு நடாத்தி மக்களைப்பெற்று மகிழ்வதையே "சரி" என்றும் அநேகர் தெரிந்திருக்கின்றனர். பெற்றோர்கள் தங்களைப்போலவே குழந்தைகளைப் பழக்குவிப்பது வழக்கம். ஒரு கணவனுக்கு வேளை தவறாமல் போஜனம் செய்விப்பதைத் தவிர ஒரு பெண்ணுக்கு ஒன்றும் தெரியாது. அவள் மூளை வேறொரு விஷயத்திலும் பிரவேசிக்காது. அவள் வேறு விஷயங்களைப்பற்றி சிறிது ஆராய்வாளாயின் அதிகப்பிரசங்கியெனப் பட்டம் பெற்றுவிடுவாள். இதற்குப்பயந்து அவளும் மற்றக் கிழவிமார்களுடன் சேர்ந்துகொண்டு ஊரிலுள்ள பெண்கள் ருதுவாகின நாட்களைப்பற்றியும், விவாகம் செய்த தினத்தைப்பற்றியும், குழந்தைபெறும் கிழமையைப் பற்றியும், மற்றவர் தரித்திருக்கும் ஆடையாபரணங்களைப் பற்றியும் பேசிக்கொண்டு இருக்கவேண்டியதுதான். கூடுமானால் பொங்கல், பொரியல், சடங்கு, செலவுசெய்யவேண்டிய நாட்களைப்பற்றியும் பேசிக்கொள்ளலாம். இதைத் தவிர இந்துப் பெண்களுக்கு வேறொன்றும் தெரியாது.

இந்த லக்ஷணத்தில் பாதிக்கோஷா முறை அனுஷ்டிக்கும் குடும்பங்களுமில்லாமலில்லை. பிரயாண காலங்களில் பல்லக்குப் பொம்மைகள்போல் ஜோடிக்கப்பட்டு கணவனின் மேற்பார்வையில் அவர்கள் வண்டிகளில் பதுங்கியிருக்கிறார்கள். ஏழைப்பெண்களுக்கோ கல்வியறிவு கொஞ்சமும் இல்லை. வெறுமனே முன்னே நடந்து செல்லும் கணவனுக்குப்பின்னே அவன் மனைவி மூட்டை முடிச்சுகளைச் சுமந்துகொண்டு நகர்ந்துசெல்வதையும், ரயில்வண்டிகளில் ஆண்கள் ஆசனத்திருக்க பெண்கள் இடமின்மையால் நிற்பதையும்



நம் பகுதிகளில் காண்கின்றோம். முஸ்லீம் பெண்கள் முக்காடிட்டிருந்தாலும் சொத்துரிமையுடன் வாழ்கிறார்கள். இந்துப்பெண்களுக்கு அதுதானுமில்லை.

அரசியல் விஷயங்களில் செலுத்தப்படும் கவனத்தில் பாதிக் கவனம் சமூக, சுகாதார, பெண்கல்வி விஷயங்களில் செலுத்தப்படுமானால் இந்தியா முற்றிலும் மாறுதலடைய இடமேற்படக்கூடும். இந்திய காங்கிரஸ் தலைவர்களோ சமூக சீர்திருத்தத்தை நினைத்தும் பார்ப்பதில்லை. பல அரசியல் வாதிகள் சமூக சீர்திருத்தக்காரர்களுக்கு விரோதிகளாகவுமிருக்கின்றனர். நாடு எக்கேடுகெட்டாலும் பூரண சுயராஜ்யம் வந்துவிடவேண்டுமென்று வம்பளக்கிறார்கள். இந்த நிலைமையில் பெண் சமூகம் முன்னேறுவதெப்படி? அவர்கள் பெற்றெடுத்த ஆண் சமூகந்தான் உயர்வடைவது எப்படி?

"இந்தியாவின் பல பாகங்களில் பால்ய விவாகத்தினால் பெண் தனது ஆரம்பக் கல்வியின் பயனை அநுபவிக்கக் கூடிய காலத்திலும், தனது கல்வியைப் பலனுறப் பெருக்கிக்கொள்ளக்கூடிய காலத்திலும், பள்ளிக்கூடத்தில் படிப்பதை நிறுத்தவேண்டியிருக்கிறது" என்று லேடி இர்வின் கூறி வருந்தியுள்ளார். இவ்வாறு குறிப்பிட்ட காலத்தில் கல்வியை நிறுத்திக்கொள்வதற்கு இதர பாகங்களில் பால்ய மணம் என்ற ஒரு காரணமாவது இருக்கிறது. இத்தக்ஷணத்திலோ ஒருவித காரணமும் இல்லாமல் கல்வி நிறுத்திக்கொள்ளப்படுகிறது. அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பு எதற்கு? என்று கேட்கப்படுகின்றது.

இந்துமதத்திலிருக்கும் பெண்களின் நிலைமைதான் இவ்வளவு மோசமாக இருக்கிறது. இந்துமதத்திலிருந்து கிறிஸ்துவ மார்க்கத்துக்குச் சென்ற குடும்பத்தார்கள் எவ்வளவோ உயரிய வாழ்வு நடாத்துகிறார்கள். கிறிஸ்துவப் பெண்களே இங்கு உபாத்தினிமார்களாக இருக்கிறார்கள். உபாத்தினிமார்களாக வந்திருப்பவர்கள் கிறிஸ்து மார்க்கத்தில் பிரவேசியாமலும், கல்விகற்காமலுமிருந்திருப்பார்களானால் வெயிலிற் செல்லாமல் நிழலிலிருந்து சாப்பிடமுடியாது. இன்னமும் கல்விகற்காமலிருக்கும் இந்துமதத்தினரைப்

போன்று வெயிலிலும், மழையிலும் அலையவேண்டியதிருக்கும். வேளை தப்பாமல் ருசியுள்ள ஆகாரத்தைக்காணமுடியாது. பழய சுடலை மாடசாமிகளுக்குக் கொடைகொடுத்துக் கொண்டு, ஆட்டும் பாட்டும் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியதுதான். ஒருக்கால் கல்விகற்றுத் தேறினாலும் பாதிக்கோஷா முறையை அனுஷ்டிக்கவே முந்துவார்கள். ஏனெனில் கிறிஸ்துவர்களுக்குப் பந்துக்களாக இந்து மார்க்கத்திலிருந்துவரும் செல்வந்தர்கள் அவ்வாறு இருக்கின்றார்களல்லவா? கிறிஸ்துமார்க்கத்தின் மகத்துவம் தக்ஷணத்தை ஒரே தலைமுறையில் தலைகீழாக மாற்றிவிட்டது.

இன்று கிறிஸ்துவ சமூகத்திலுள்ள பெண்கள் தங்கள் மனங்கொண்ட காதலனைப் பெற்றோர்களிடம் தெரிவித்து மணம் செய்து கொள்கின்றனர். கணவனுடன் சரசசல்லாபமாகவும், சமத்வமாகவும், அன்பாகவும் காதல்மொழி சம்பாஷிக்கின்றனர். பாதிக்கோஷா வழக்கத்தைப் பெருமையாகவும் அவசியமாகவும் கருதி அதிற் புகுந்துகொள்ளாமல் மாலைவேளையில் வெளியிற்சென்று நல்ல காற்றைக்குடிக்கிறார்கள், வரவுக்குத்தக்க செலவு செய்கிறார்கள், வீட்டைச் சுத்தமாகவும், அலங்காரமாகவும் வைத்திருக்கிறார்கள், மிக அதிகமான தெய்வங்களை வைத்து அறிவுக்குப்பொருத்தமில்லாது வணங்காதிருக்கிறார்கள். ஓய்வு நேரங்களில் சும்மா இருந்து வம்பளக்காமல் ஏதேனும் ஒருபுஸ்தகத்தையெடுத்து படித்துக்கொண்டும், படித்ததை நினைத்து சம்பாஷித்துக் கொண்டும், தையல்வேலை செய்துகொண்டுமிருக்கிறார்கள். இந்த சமசுதந்தர வாழ்வைப்பார்த்தீர்களா? இதனினும் உயரிய வாழ்வு உளதாமோ?

இவ்வித பல கருத்துக்கள் விசாலமாக இருப்பதே இக்காலத்தின் விசேஷம். விசால பாதையில் உலகம் பறக்கிறது. அது எவ்வளவு வேகமாகப்போய்க் கொண்டிருக்கிறதென்பதைக் கவனித்தால் [illegible]னதுக்குப்பிரேமையுண்டாகிறது. நாம்மாத்திரம் இருந்[illegible]டத்தைவிட்டு அசையாமல் குந்திக் கொண்டிருப்போமா?



# "நான் இந்தியன்."

(L. N.)

இந்தியாவிலேயே பிறந்து இந்தியாவிலேயே வளர்ந்து இந்தியாவிலேயே தங்கள் முழு ஜீவியத்தையும் கழிக்க வேண்டிய ஒவ்வொருவரும் "நான் இந்தியன், இந்தியாவில் பிறந்தவன், இந்தியா என்னுடைய தேசம்; இந்தியா என்னுடைய தாய்நாடு" என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறான். இந்தியன் ஒருவன் அந்நியநாட்டில் இருக்கும்போது தன் தேசத்தவர் எவரையாவது சந்திக்க நேரிடின் அவரையறியாத ஓர் வாஞ்சையும், அன்பும் அவர்பால் செல்வதோடல்லாமல் அவரிடம் பேசவும், அவரது க்ஷேமலாபங்களை விசாரிக்கவும் தூண்டுகிறது. அதுபோலவே தன் தேசத்தவனுக்கு ஏதாவதொரு இடையூறு ஏற்படின் தன்னாலான அளவுக்கு அவனுக்குதவி, அவனது துயரகற்ற முயற்சிக்கிறான். தன் சொந்த தேசத்தில் யாதாமொரு பாகத்தில் பூகம்பம், வெள்ளம் முதலிய எதிர்பாராத ஏதாமொரு சம்பவம் நேர்ந்துவிட்டதறிய அவன் மனம் வாதனை அடைகிறது. பெரும் கோர சம்பவங்கள் நிகழ்ந்துவிடின் அவன் கண்ணினின்று நீர் பெருகுகிறது. இத்தகையதோர் உணர்ச்சியைத்தான் "தேசாபிமானம்" (Patriotism) என்பர். "என் தேசம், என் தாய்நாடு என்று பெருமையோடு சொல்லிக்கொள்ளும் உணர்ச்சியோ ஆசையோ இல்லாத எந்த மனிதனும் பிணத்துக்கு சமமாகும்" என்று மேனாட்டுக்கவிஞர் ஒருவர் எழுதியதுபோல் அவன் உண்மையில் நடைப்பிணமேயாவான்.

ஜாதிமத பேதமின்றி மக்கள் யாவரும் அன்னியோன்யமாய் வாழ்ந்த முக்காலத்தில் மக்களுக்கிருந்த வாஞ்சையும் அன்பும், ஒற்றுமையும் இந்த நாகரீக காலத்தில் இல்லையென்பது வருந்தத்தக்கதே. ஒரு சில சுயநலக்கூட்டத்தார் தங்கள் உயர்வை என்றும் காப்பாற்றிக்கொள்ளவும், தங்களுக்கு எவ்வித சரீரப்பிரயாசையுமில்லாமல் ஊரார் உழைப்பில் சுகபோகிகளாய் வாழவேண்டுமென்ற எண்ணமுமே இன்றய ஜாதிசமய வித்யாசத்திற்கும், உயர்வுதாழ்வுக்கொடுமைக்கும்

காரணமாகும். பிறவியில் உயர்வுதாழ்வு என்பதே கிடையாது. தொழில் வேறுபாட்டால் ஏற்பட்ட பற்பல பிரிவினர் பற்பல தொகுதியினராய் வாழ்ந்து வந்ததினிமித்தம் பல பிரிவினர்களாயினர். அவர்களையே சமூகத்தில் தங்களை உயர்ந்தவராகக் கருதிக்கொண்டு இருக்கிறவர்கள் பிரித்து வைத்து பல்வேறு வகுப்பினராக்கிக் கொடுமைக்குள்ளாக்கினர். அதையே வலியுறுத்தவும் நிலைநிறுத்தவும் சாஸ்திரங்களின்மூலமாகவும், புராணங்களின்மூலமாகவும் ஆதாரங்கள் தேடிவைத்தனர். கல்வியறிவில்லா பலகோடி மக்களைப் பெற்ற நமது நாட்டில் சாஸ்திர புராணங்களை நம்புவதும், அதன் கட்டளைப்படி நடப்பதும், "புண்ணியம்" என்றும், அதுவே "தெய்வீகக் கட்டளை" என்றும் மதித்து நடந்து வர யாரைக் கேட்கவேண்டும்?

சாஸ்திர புராணங்கள் அனைத்தும் கடவுளால் ஆக்கப்பட்டவையல்ல. அவைகளை மதித்து நடக்கவேண்டியதும் மக்கள் கடமையல்லவென்பது இன்றைய உலக மக்கள் அறிந்தே இத்தகைய கற்பனைக் கதைகளை ஒரு ஜாதியாரை என்றென்றும் அடிமையாக்கிவைக்க ஏற்பட்ட சூழ்ச்சி சாதனங்கள் என்பதையறிந்து கண்விழித்தே இன்று நமது தீண்டப்படாத தாழ்த்தப்பட்ட சகோதரர் ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும், ஒவ்வொரு ஊரிலும் அவைகளைத் தீக்கிரையாக்கி வருகின்றனர். அவர்கள் இவ்விதம் செய்வது சாலவும் பொருந்தும். ஏனெனில் இத்தகைய சூழ்ச்சிகளெல்லாம் இடைக்கால சொருகல்கள் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துவிட்டனர். இத்தகைய ஜாதி சமய பிரிவினைகள் நாட்டிலிருக்கும் வரை விடுதலையோ, பூரண சுயராஜ்யமோ, சுதந்திரமோ எல்லாம் பகற்கனவேயாகும். "ஜாதி வித்தியாசமும், ஜாதிக்கொடுமையும் நாட்டை விட்டகன்றாலன்றி எவ்வித விடுதலையும் பயனளிக்காது" என்று மகாத்மா காந்தியே பல மேடைகளிலும் பல்லாயிரம் தடவை சொல்லி இருக்கிறார். ஆனால் அவரைப் பின்பற்றும் விடுதலை வீரர்கள் பல்லாயிரவர் இன்னும் அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார், செட்டியார், பிள்ளை என்ற ஜாதிப்பட்டத்தை

468-ம் பக்கம் பார்க்க.



# செய்தித் திரட்டு.

கிரேட்பிரிட்டன் தங்க திட்டத்தை கைவிட்டதுமுதல் இதுவரை அந்நியநாடுகளுக்கு சுமார் 253 கோடி ரூபாய்க்கு மதிப்புள்ள தங்கம் இந்தியாவினின்றும் பம்பாய்வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

திருவனந்தபுரத்தில் நடைபெறவிருக்கும் அகில இந்திய பெண்கள் மகாநாட்டிற்கு லண்டன், சர்வதேச கர்ப்பத்தடை ஆராய்ச்சி நிலைய தலைவியான, ஸ்ரீமதி மார்க்கரெட் சாங்கன் விஜயம் செய்வார். அவர் இந்தியாவிலுள்ள பல பிரமுகர்களைச் சந்திப்பார் என்றும் தெரிகிறது.

அதிவேகமாய்ச் செல்லும் நூதன யுத்த விமானம் ஒன்றை, அட்டானி பார்க்கன் என்பவர் கட்டிவருகிறார். அந்த விமானம் 2000 அடி உயரத்தில் மணிக்கு 3280 மைல் வேகம் செல்லக் கூடுமாம். 7 நிமிஷத்தில் 16000 அடி உயரம் எழும்பக் கூடுமாம். இதில் 20 மில்லிமீட்டர் தானாகச் சுடும்படியான துப்பாக்கியும், 2 இரக்கைகளும், 2 மிஷின் துப்பாக்கிகளும் வைக்கப்படுமாம். இது பிரெஞ்சு ஆகாயப் படைக்காகச் செய்யப்படும் உலகத்திலேயே பெரிய யுத்த விமானமாகும்.

ஜாகிரியா என்ற நகர்க்காட்டில் மரம் வெட்டி ஒருவன் மரத்தை வெட்டிக்கொண்டிருந்தானாம். பின்புறமிருந்து அவனுக்குத் தெரியாமல் புலி ஒன்று அவன் தலைப்பாகையைக் கவ்விக்கொண்டு போய்விட்டதாம். மரம் வெட்டி உயிர்தப்பி வீடு சேர்ந்தானாம்.

டப்டம் விமான நிலயத்தில் பயிற்சிபெறுவதற்காக தாஸ்ராய் விமான ஸ்காலர்ஷிப் ஒன்று ஏற்பட்டிருந்தது. அதற்குப் பல பெண்கள் விண்ணப்பித்துக் கொண்டனர். காலேஜ்மாணவியான மிஸ் அசோகாராய் சாட், பி. ஏ., வுக்கு 1000 ரூ. ஸ்காலர்ஷிப்பும், மிஸ் அஞ்சிலிதாஸ், எம். ஏ., வுக்கு 500 ரூ. ஸ்காலர்ஷிப்பும் கிடைத்திருக்கிறதாம்.

நீபஞ்சனன் விஸ்வாய் என்பவர் இதுசமயம் 101 வயதுடையவராய் இருக்கிறார். இன்னும் வக்கீல் தொழில் செய்துவருகிறாராம். மூக்குக் கண்ணாடி முதலியன உபயோகிப்பதில்லையாம். வக்கீல் தொழிலில 60 வருஷ அனுபவம் பெற்றிருக்கிறாராம்.

இங்கிலாந்துதேசத்தில் பார்லிமெண்டில் சட்டமூலமாக அவசியத்தையும், விருப்பத்தையும் பொருத்து தற்கொலை செய்துகொள்வதைக் குற்றமாகப் பாவிக்கலாகாதென முடிவு செய்யவேண்டுமென பல அங்கத்தினர்கள் முயற்சித்து வருகிறார்களாம்.

டில்லியில் சிராகானு என்ற இடத்திலுள்ள ஸ்ரீமான் ராவ்பகதூர் மாத்தூர் என்பவரின் 9-வயது குமாரி ஸ்ரீமதி சாந்திதேவி பூர்வஜன்மத்தில் மட்ரா எனும் ஊரில் கேராநாத் என்பவர்தான் அவளது கணவனென்றும், தனக்குக்குழந்தை பிறந்த பத்தாம் நாள், தான் இறந்துபோனதாகவும், விபரமான அடையாளங்களோடும், வீட்டின் அடையாளம், தெருவின் அடையாளம், குடும்பவிவகாரம் முதலியவற்றைச் சொன்னதாகவும், பின்னர் அவளுடைய தற்போதைய தந்தையும், வேறு சில நண்பர்களும் பெண்ணை மட்ராவுக்கு அழைத்துப்போய் பெண் சொல்லியவைகளெல்லாம் முழுதுவதும் உண்மையாய் இருப்பதாகத் தெரிவதையும் கண்டார்களாம். அப்பெண் தான் இறக்குமுன் ரூ. 100 புதைத்து வைத்திருப்பதாகச் சொல்லி தன் முந்திய புருஷன் வீட்டில் அதைத்தோண்டி எடுத்துக் காட்டியதாகவும் தெரிகிறது. இதையறிந்து ஆயிரக்கணக்கானவர்கள் அப்பெண்ணை தினசரி பார்த்துவருவதாகவும் தெரிகிறது.

இத்தாலியின் பணமுடையை நிவர்த்திக்கவேண்டி வீரஞ்செறிந்த இத்தாலிய மங்கையர் பலர் தங்கள் கல்யாண மோதிரங்களை இத்தாலிய சர்க்காருக்கு அனுப்பி, அவைகளை உருக்கி செலவு செய்துகொள்ளும்படி முஸோலினிக்குத் தெரிவித்துள்ளனராம். அந்த மோதிரங்களுக்குப் பதிலாக எஃகினால் மோதிரங்கள் செய்து அதன் மீது "என்னுடைய தேசத்திற்காக" என்ற எழுத்துக்களை செதுக்கி அணிந்துகொள்ள உறுதி கொண்டுள்ளன[illegible]



# அகத்தியர் குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்.)

(421-ம் பக்கத்தொடர்ச்சி.)

தான்பிறது சொல்லுகிறேன் உறக்கமும் விகாரமும்கண்டு
தக்கதொரு மூச்சுமுட்டல் பிரிந்துமேதான்
ஊனான பிராணனது போகுமய்யா
உள்ளபடி யிதற்குடனே பரிகாரஞ் செய்வாய்
தேனான சுவாசக்குழல் தனையே அய்யா
சோதித்து விடுவதே நல்ல வேளை
மானான இந்தநோய் அபூர்வமாகப் பார்த்தே
மானிடர்க்கு வருமென்று வழுத்தினேனே. (99)

## சலதோடம்.

வழுத்துவேன் சலதோட வகையைக் கேளாய்
வன்மையாய் நாசிக்கும் சுவாசக்குழலுக்குந்தான்
அழுத்துவேன் அதிலிருக்கும் சேட்டுமசவ்வுக் கேதான்
அப்பனே உக்கிர தாபங் கண்டால்
நழுத்துவேன் அதற்குசல தோடமென்பார்
நலமான சளியூறும் சவ்வுக்கு வெப்பங் கண்டால்
கிழர்த்தியாஞ் சலதோட மென்றே போம்
கடிதான நாசிக்காய் பீடத்துக்கு வேதனை
காணுங்காணே. (101)

காலான அதற்குமேல் காகாப் பென்னும்
கடிதான சுவாசக்குழல் அதன்கிளைக்குங் கண்டால்
மேலான அதற்குத்தா னிருமலென்பார்
மெதுவாகத் தானிதற்குக் காரணத்தைக் கேளாய்
சேலான குளிர்ச்சியொடு சுரத்தின் பேதம்
செம்மையுள்ள ஈரத்தில் நடக்கையாலும்
வாலான வாவிவருமென்று சொன்னேன்
வன்மையுள்ள சலதோடத்தின் மேன்மை தானே. (101)

நேர்மையுட னதினுடைய குணத்தைக் கேளாய்
நெத்திமுகம் கண்கால்கள் வேதனையே செய்யும்
கூர்மையுடன் நீர்விடுதல் குரலுங் கம்மல்
குடிகெடுத்த சுரந்தாக மன்னத் துவேசம்
பாரய்யா தொண்டைதான் புண்போல் நோகும்
பண்பான உஷ்ணந்தா னதிகங் கொண்டு
சீர்மையுடன் மூன்றுநாள் வருத்தந் தந்து
சிறப்புடனே அப்பாலே எல்லாம் போமே. (102)

## பீநிசம்.

எல்லையுள்ள பீநிசத்தின் நோயைக் கேளாய்
எப்போதும் சலதோடம் வருவ தாலும்
தொல்லை செய்யும் மேகரோ கத்தினாலும்
தோன்றினதோர் கிரோகத்தின் தன்மையாலும்
அல்லல்செய்ய இந்தநோய் பிறக்கு தய்யா
அப்போது நாசிதனில் சொல்லக் கேளு
சல்லியஞ்செய் சலதோட மாகத் தோன்றி
சளியூறுஞ் சவ்வப்போ தடித்துப் போமே. (103)

தடித்துமே மூக்கடைப்பு மிகவுங் கண்டு
சதியான பீநிசம்போல் முதலில் தோன்றி
நெடித்துமே நெத்திதனில் வேதனையுங் கண்டு
நெடிதான இருமலுடன் துர்ப்பலமு முண்டாய்
துடிப்புடனே சளிதானும் அதிகரித்து
துர்நாற்ற முடன்சீயும் எப்போதுங் கண்டு
சடித்தமுடன் சளிஐபா சீயைப் போலே
தான்மாறிப் போகுமடா தரணி யோர்க்கே. (104)

தரணிதனில் சிலேட்டு மத்தின்
தானூரு கிரணமாகப் புண்ணே யானால்
முரடிதனில் சளியுடனே இரத்தங் காணும்
முக்கியமாய் சளியுறைந்து அடிக்கடி வீழும்



பரணியுள்ள போஜனத்தி லிஷ்ட மின்றி
பன்மையுள்ள கிரோகந்தான் சடைவுண்டாகி
விரணமுள்ள கிரோகத்தில் மேகநீ ருண்டாகில்
விக்கினமாய் மூக்கின் தண்டில் துவாரமுண்டாமே. (105)

உண்டாகும் வேளை தனில் மூக்கி லய்யா
உறுதியுள்ள சன்னெலும்பு ரணமே யாகி
துண்டுதுண்டாய் வெளியேவரும் போது கண்டால்
தொல்லுலகில் தீராப்பீநிச மிதுவே யென்பார்
கண்டிதமாய் மற்றதொரு பீநிசங்க ளெல்லாம்
கடிதாகச் சிலநாள் மூக்குநீர் வடிந்துகாட்டும்
துண்டரீக ரோகத்தைத் தீர்க்க வேண்டி
சூட்சமொன்று சொல்லுகிறேன் துலங்கக் கேளே. (106)

கேளடா நாசியுட சளியை நீக்கி
கெடிதமுடன் சலமதனால் சுத்தி செய்து
வாளடா பன்றிநெய் தனிலே அய்யா
வளமான குங்குமப்பூ யிட்டு நீயும்
தேளடா தைலமதை காய்ச்சிக் கொண்டு
தினமும் நீ மூக்கிலே விட்டு வந்தால்
பாளடா போகாது இந்த ரோகம்
பறக்குமடா தினமெட்டில் பறக்குந் தானே. (107)

## குழந்தைகளின் மாந்தம்.

பண்பான குழந்தைகளுக் கிந்த ரோகம்
பாரிலுள்ளோர் தானறியப் பகர்வேன் கேளாய்
தண்மையுள்ள சுவாசக்குழல் தாபனத்தின் ரோகம்
தருவான குறவளைக்கும் வியாபித் தேதான்
வண்மையுள்ள தபானத்தின் இடத்தி லய்யா
வளமாக நூதனமாய் சவ்வுண் டாகி
நுண்மையுள்ள குழந்தைகட்கே மாந்த நோவு
உண்டாகு மென்றுநீ உறுதி சொல்லே. (108)

உருதியாய் சுவாசக்குழல் கிளைகளுக்கும்
  உற்றதொரு புப்புசமுந் தொந்தப் பட்டு
அருதியாய்த் தளர்ச்சியொடு மூச்சடைப்புக் கண்டு
  அப்பனே இருதயத்தில் இரத்தங் கட்டி
கருதியே கொல்லுமடா பாலர் தன்னைக்
  கண்டிப்பாய் அதனுடைய குணத்தைக் கேளாய்
குருதிபோல் சலம்வடியும் இருமல் தோன்றும்
  குரல்கம்மல் உறக்கமுடன் கண்சிவக்கும் பாரே. (109)

ஆமேதான் அற்பசுரங் கொஞ்சங் கண்டு
  அப்பனே நாள்மூன்று ஆன பின்பு
பூமேவு பாலர்கள்தான் இருமும் போது
  பொல்லாத வெங்கலத்தின் சத்தங்காணும்
காமேதான் சுவாசமது உள்செல்லுங்காலை
  கருவான சத்தமது கூவும் பாரு
வாமேதான் வாயைநீ திறந்து பார்த்தால்
  வளமான கோளங்கள் வீங்கிவிடுங் காணே. (110)

வீங்கியது சிவந்துமே உள்நாக்குங் கூட
  விரிவாக வீங்கியே இருக்குமப்பா
தூங்கியே திரியாதே வியாதி மீறில்
  தொந்தித்த சுரமுந்தான் சாஸ்தி யாகும்
தேங்கியதோர் சுவாசமுந்தான் அதிகமாகி
  தெளிவான மூச்சுவிடக் கஷ்ட மாகும்
தாங்கியதோர் இருமலய்யா அதிக மாகும்
  தத்துவத்தின் நாடியது தணியும் பாரே. (111)

(தொடரும்)

ஸ்ரீ பழனியாண்டவர்
சந்தனம், விபூதி, தீர்த்தப்பிரசாதம்
அனுப்பித்தர ¼ அணா ஸ்டாம்ப் அனுப்புக.
S.V. ராஜப்பா, [illegible]



# சுகாதாரப் பகுதி.

## நித்திரை.

(டாக்டர். C. P. சாமி)

நாம் பகல்முழுதும் வேலைகள் செய்வதால் நம்முடைய தேகத்திலிருக்கும் அவயவங்கள், மூளை சோர்வடைகின்றன. ஆதலால் அவைகள் இளைப்பாற நாம் நித்திரை செய்யவேண்டும். அப்போது அவைகளின் ஆயாசம் தீர்வதுடன் வேலைசெய்ததால் அழுத்தப்போன தேய்ந்த பாகங்கள் நாம் தூங்கும்போது இரத்தத்திலிருந்து போதுமான உணவைப்பெற்று பூர்த்திசெய்துகொள்கின்றன. ஆதலால்தான் நித்திரைசெய்து எழுந்தவுடன் களைப்பு நீங்கி நமது அவயவங்களுக்கு புதுப்பலம் உண்டாகிறது. நித்திரை நமக்கு சுகத்தைத்தருவதோடு ஓய்வையும் இன்பத்தையும் தருகிறது. பகலில் நித்திரைசெய்வதும் இரவில் அதிக நேரம் கண்விழித்திருப்பதும் வேடிக்கைபார்க்கச்செல்வதும் உடல் நலத்திற்கேற்றதல்ல. சிலர் காலை 8 மணிவரை நித்திரை செய்கின்றனர். இது மிகவும் கெட்டபழக்கம் இதனால் சோம்பேறித்தனம் அதிகரிக்கும். இராக்காலத்தில் 10-மணிக்கு முன் நித்திரைக்குப்போய் உதயம் 5-மணிக்கு முன் நித்திரைவிட்டெழுந்திருப்பது நல்லவழக்கம். வெள்ளெனப்படுத்து விடியுமுன் எழுந்திரு என்றபழமொழியைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

சிலர் இரவில் படுத்தபின்பு வீட்டு விவகாரங்களையும் வெளி விவகாரங்களையும் பணம் வருவாயையும்பற்றி சதாசிந்தனை செய்துகொண்டிருப்பதால் அவர்களுக்கு நித்திரை பங்கமேற்பட்டு பலவித சொற்பனங்களும் உண்டாகிறது. படுக்கைக்குப்போனவுடன் எவ்வித கவலையுமின்றி சந்தோஷமாய் நித்திரை செய்யவேண்டுமென்ற ஒரே எண்ணத்தை மனதில் கொள்ளவேண்டும். தூங்கும்போது நமது அவயவங்கள் தளர்ச்சியாயிருக்கும்படி உடுத்திக்கொள்ள வேண்டும். சரீரத்திலுள்ள நரம்புகளை அழுத்தும்படியான உடை

யையணிந்துகொண்டு நித்திரை செய்தால் இரத்த ஓட்டம் குறைவுபடும். படுக்கும்போது எப்போதும் இடதுகைப்பக்கமே ஒருக்கணித்துப் படுக்கவேண்டும். இவ்வாறு படுப்பதால் இரைப்பை, நீர்ப்பை, பித்தப்பை முதலிய ஜீரணக்கருவிகள் அதனதன் ஸ்தானத்தில் இருக்கக் கூடும். இரண்டு கைகளையும் கால்களின் மத்தியில் வைத்துக்கொண்டாவது, முகத்தைத் துணியால் மூடிக்கொண்டாவது, மேடுபள்ளமான படுக்கையிலாவது, வெட்டவெளியிலாவது, வெறுந்தரையிலாவது படுக்கக் கூடாது. அதனால் நித்திரைகெட்டு உடலுக்குப் பலவித பிணிகளுண்டாகும். நமது படுக்கை, தலையணை, போர்வை, துப்பட்டி இவைகள் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கவேண்டும். தரையில் படுக்காமல் சற்று உயரமான பலகை மஞ்சத்தில் படுப்பது நலம். அப்பலகையை அடிக்கடி கழுவ வேண்டும்.

படுக்கை அறையானது ஒடுக்கமுள்ளதாயிராமல் விசாலமுள்ளதாயும், நல்ல காற்றோட்டம் உள்ளதாயும் இருக்க வேண்டும். நோயாளிகள் படுத்திருக்கும் அறைகளில் நாம் படுக்கக் கூடாது. பழய கட்டிடங்கள், மரங்கள், மலையடிவாரங்கள் முதலியவைகளின் கீழும் படுத்து உறங்கக் கூடாது. மெதுவான படுக்கையில் படுப்பதைவிட கெட்டியான படுக்கையில்படுப்பது சரீராரோக்யமுள்ளவர்களுக்கு நல்லது. அதனால் தேகத்தின் தசைநார்கள் கெட்டிப்படுகின்றன. நரம்புகள் பலப்படுகின்றன.

தாயும் பிள்ளையும் பக்கத்தில் படுத்துறங்கக் கூடாது. ஏனெனில் அதிகமான பிராண வாயுவை தாய் இழுத்துக் கொண்டுவிடுவாளாதலால் குழந்தைக்குப் பிராண வாயுவு குறைந்துபோகும். பெரியவர்களைவிட குழந்தைகளுக்கு அதிகத் தூக்கம் அவசியம். பெரியவர்களுக்கு 6 மணி நேரம் தூக்கமே போதுமானதாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட சுகாதார விதிப்படி ஒவ்வொருவரும் நடந்துவந்தால் நோயற்ற வாழ்வு வாழலாம்.

---



# மருந்து செய்பகுதி.

## கணை எண்ணெய்

பெரும்பூசணிக்காய், வெங்காயம், எட்டிப்பழம், ஓரிலைத் தாமரை இவைகளின் சாறு வகைக்குப் படி $\frac{1}{4}$. வெந்தயம் ரூபாயெடை $1\frac{1}{2}$. இவைகளை ஒன்றாய் அரைத்து, சிற்றாமணக்கெண்ணெய் படி $\frac{1}{4}$-ல் கலந்து மண் பாண்டத்திலிட்டு அடுப்பிலிட்டு நீர் சுண்டக்காய்ச்சி வடிகட்டி இதில் கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு குன்றிமணியெடை 6. பொடித்துப்போட்டு புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:- வேளைக்கு 1-கரண்டி (டேபிள் ஸ்பூன்) காலை மாலையாக நாள் 1-க்கு 2-வேளை வீதம் பெரியவர்களுக்கும், இரவில் படுக்கப்போகும்போதுமட்டும் ஒரு கரண்டி (டீஸ்பூன்) குழந்தைகளுக்கும் கொடுக்கவும்.

உபயோகம்:- சகல உஷ்ணம், வெட்டை, அஸ்திச்சூடு, வயிற்றுவலி, கணை, வாய்நாற்றம், கண் எரிச்சல் குணமாகும்.

---

## திரிசுர கசாயம்.

கூறுமெனும் பாலாட்டை கொண்டசித்தண்டம்
வீறுமம் வேலிப்பருத்தி வேருடனே
நாறுகின்ற நல்மிளகுகூட்டி நலமாய்க் கசாயமிட
மாறுமே வாதசுரம் மாதே.

செப்புமடல் கோஷ்டம் செய்ய கொத்தமல்லிசுக்கு
மெப்புடைய சீரகமும் வில்வவேர் தப்பாத
சித்த[illegible] வேருடனே சீராய்க்கசாயமிட
பித்தசுர[illegible]ாகுமெனப்பேசு

பேசுமாடாதோடை பின்கண்டங்கத்திரி வேர்
வீசும் அரத்தை காஞ்சோரி வேர்ப்பூலாமாசிலா
பொன்முள்ளி தூதுசுக்கு புட்டாய்க்கசாயமிட
செம்மையாகும் சிலேத்மசுரம் செப்பு.

## பரங்கிப்பட்டை லேகியம்.

பரங்கிப்பட்டை ரூபாயெடை 6, கொடிவேலி வேர் சங்கம்வேர், அமுக்கிராவேர் இவைகளின் பட்டை வகைக்கு ரூபாயெடை 2, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம் வகைக்கு ரூபாயெடை $1\frac{1}{2}$, லிங்கம் ரூபாயெடை $\frac{1}{2}$, இவைகளை இடித்து, வஸ்திரகாயம்செய்து, சீனி ரூபாயெடை $2\frac{1}{4}$ பாகுசெய்து, மேற் சூரணத்தை அதில் தூவி, நெய் படி $\frac{1}{4}$, தேன் படி $\frac{1}{8}$ விட்டு, கிளறி ஜாடியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:- வேளைக்கு கொட்டைப்பாக்கு அளவு காலை மாலையாக நாள் ஒன்றுக்கு இரு வேளை வீதம் சாப்பிடவும்.

உபயோகம்:- மேகசூலை, கருமேகம், கைகால் குடைச்சல் நீங்கும்,

பத்தியம்:- புளி, புகையிலை நீக்குவது நலம்.

---

### அண்டவாதத்திற்கு மேற்பூச்சு.

கழற்சிப் பருப்பு, வெள்ளைப்பூண்டு, சுக்கு, நவச்சாரம் இவை வகைக்கு ரூபாயெடை கால் எடுத்து கோழி முட்டை வெண் கருவு விட்டரைத்து அண்டத்தில் பூச மூன்று நாட்களில் குணமாகும்.

---

"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

உமேலை K. S. ராமனாத அய்யர், ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.



# மூலிகைப் பகுதி.

## வில்வம்.

---

இந்துக்கள் இதை வெகு சிரேஷ்டமானதாகக் கருதுகிறார்கள். இது எல்லா இடங்களிலும் கிடைக்கும். இதன் கொழுந்து, இலை, பூ, காய், பழம், பட்டை, பிசின், வேர் முதலியன யாவும் மருந்துக்காகப் பயன்படுகிறது.

உபயோகம்:— கொழுந்து சல மேகத்தையும், இலையின் கஷாயம் சன்னி, சுரம் முதலியவைகளையும், பூ மந்தத்தையும், பிஞ்சு குன்மத்தையும், காய் இரத்த பேதியையும், பழம் கண்ணிருளையும், பிசின் சுக்கிலக் குறைவையும், வேர் பல வியாதிகளையும் நீக்கும்.

பழத்திலிருந்து தைலம் செய்து வாதநோய்களுக்கும், கஷாயமிட்டு பேதி நிவாரணத்திற்கும் கொடுக்கிறார்கள். முக்கியமாய்க் குழந்தைகளுக்குப் பேதியாய்க் கொண்டிருக்கும்போது இதைக்கொடுத்தால் குணமுண்டாகும். இப்பழத்தின் சதையைப் பாலில் கலந்து தக்கோலம், வால்மிளகுப்பொடி சேர்த்து சாப்பிட்டால் ரத்தவிருத்தி, இந்திரியக்கட்டு உண்டாகும். சதையுடன் சோம்பு, சுக்கு, சேர்த்து கஷாயமிட்டு சாப்பிட்டுவர மூல வியாதி குணமாகும். வேருக்கு வாதகுன்மம், பித்தசோகை, சன்னிபாதம், அருசி, மந்தாக்கினி, வாந்தி குணமாகும். தேகபுஷ்டியும் உண்டாகும்.

வில்வத்தின்வேருக்கு விறுகுன்மவாயுகபம்
சொல்லவொண்ணாப்பித்தந் தொடர்சோபை-வல்லகப
தாகசுரநீரேற்றஞ் சன்னியொடுமெய்வலியும்
வேகமொடுநீங்குமே.

அக்கினிமாந்த மரோசிய திசாரம்விக்கல்
நிற்கரியபித்தசுரம் நீள்சாந்தி-சுட்கரோ
யாதிபரோமேகு மழகோடுபுஷ்டியுண்டாங்
கோதில்வில்வவேரதனைக்கொள்.

(பதார்த்தகுணசிந்தாமணி)

456-ம் பக்கத்தொடர்ச்சி.

விடக்காணோம். என்றாலும், சில 'தேசபக்தர்கள்' சுயராஜ்யம் வந்தால் இவையெல்லாம் தானாகவே மறைந்துபோகுமென்கிறார்கள். இது குதிரைக்கு முன் வண்டியை வைத்த பிரகஸ்பதியின் விவேகத்தையேயொக்கும்.

ஆகவே இங்கு நான் கூறவிரும்புவது யாதெனில் இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் "நான் இந்தியன்—நாம் இந்தியர்" என்று சொல்லிக்கொள்ளப் பிரியப்படவேண்டும். பள்ளிப்பிள்ளைக்கு உபாத்திமார்கள் "நாம் இந்தியர்" என்ற பாடத்தை மனதில் பதியவைக்கவேண்டும். பாடபுத்தகம் எழுதும் நூலாசிரியர்கள் "நாம் இந்தியர்" என்ற ஒரு பாடத்தை எல்லா வகுப்புப் புத்தகங்களிலும் சேர்க்கவேண்டும். தேசாபிமானிகள் என்பவர்கள் சுயநலம் பாராது மக்கள் க்ஷேமத்தைக் கருத்திருத்தி சேவை செய்பவர்கள் என்றே அர்த்தம். அதனுண்மை தெரியாது நுனிப்புல் மேய்பவர்களுக்கு மாறுபாடாய்த்தெரியும். உபாத்திமார்கள் பொறுப்பும் சேவையும் பலவகையில் சிறந்ததென்பதை அவர்கள் உணரவேண்டும். இன்று பெரும் பெரும் உத்தியோகமும், அந்தஸ்துமுள்ள ஒவ்வொருவருக்கும் பள்ளியில்தான் விதையிடப்படுகிறது. ஆகையால் அவர்கள் இன்றுள்ள நிலைமைக்கு உபாத்திமார்களே முக்கிய காரணஸ்தராவார்கள். எவ்வித ஆடம்பர விளம்பரம் இல்லாத "அடக்க ஊழியர்" ('Silent Worker) என்று அவர்களைத்தான் கூறவேண்டும். ஆகையினால்தான் உபாத்திமார்கள் பிற்கால சந்ததியார் போற்றத்தக்க முறையில் நடந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, எனது வாலிப சகோதரர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். யார் எப்படி எந்த வழி சென்றாலும் மற்றவர்களை எதிர்பாராது நீங்கள் ஜாதி சமய பட்டங்களையும், சின்னங்களையும் அறவே ஒழிக்கவேண்டும். "விடுதலைக்கு முதற்படி" இதுவே என்பதை நிச்சயமாய் உணருங்கள். தற்கால நாகரீக சந்ததியாரால் போற்றப்படவேண்டுமானால் இந்த நிமிஷமே இதைச்செய்ய விரதங்கொள்ளுங்கள். "நான் இந்தியன்; நாம் இந்தியர்" என்ற பல்லவியை எந்த நேரத்திலும் மறந்துவிடாதீர்கள்.



# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(429-ம் பக்கத்தொடர்ச்சி)

அங்கம் 3] களம் 3]

ஜயதுங்கன், சந்திரகுமாரன்.

காலம்—இரவு. இடம்—அவர்கள் வீடு.

ஜயதுங்கன்:—குழந்தாய் சந்திரகுமாரா! 'இளங்கன்று பயமறியாது' என்ற வாக்கியம் உன் விஷயத்தில் மெய்யாயது. பலாபலன் கருதாது மதயானைமீது பாய்ந்தாய். அதனால் தரையில் வாரி எறியுண்டாய். பசும்புற்றரையாதலின் உயிர் பெற்றாய். ஆயின் என்ன? மரணத்திற்குச் சமமான பல அவஸ்தையும் பட்டாய். எங்களைத் துன்பத்துள் ஆக்கினாய். அன்னை மீனாம்பிகை தன் அருளால் மீண்டும் உயிர் பெற்றாய்.

சந்திரகுமாரன்:—தந்தாய்! ஒன்றே நினைத்தேன். அது ஒழிந்து மற்றொன்று ஆயிற்று. நான் எதற்கும் அஞ்சா நெஞ்சினன் என்பதை உலகத்திற்கும் முக்கியமாய் சுகுணசுந்தரிக்கும் விளக்க எண்ணினேன். அது ஒழிந்து நான் மதியிலன், விட்டிலன்ன தன் கேட்டைத்தானே ஆக்கிக்கொள்பவன் என்பதை சோணாட்டு யுத்தத்தினாலும், சுகுணசுந்தரியைக்காக்க முயன்றதினாலும் காட்டிக்கொண்டேன் இவ்விருகிருத்தியங்களாலும் சுகுணசுந்தரிதன் சொற்ப மதிப்பையும் இழக்கலானேன்.

ஜயதுங்கன்:— குழந்தாய்! விஷயம் இவ்வளவுடனா முடிந்துள்ளது? நாகானந்தன் அன்று சோழநாட்டில் உன் சிறை மீட்டனன். இன்று சுகுணசுந்தரிதன் உயிர் காத்தனன் என்றன்றோ எல்லோராலும் புகழப்படுகின்றனன். சுகுணசுந்தரி இப்பொழுது அனுபவிக்கும் நோயினைக் கரு

துங்கால் காதல் நோயென எனக்கு விளங்குகிறது. அவள் காதலைப்பெறும் வனப்பும், வல்லமையும் உள்ளவன் நாகானந்தனன்றி வேறு யாருளர்? அப்படி இருப்பினும் அவன் குலப்பெருமையில்லானாதலின் அவன்மீது அவள் கொண்டுள காதல் பலனிலதாகும். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நாம் விரலால் கிள்ளி எறிவதை கோடரி கொண்டன்றோ பிளத்தல் வேண்டும். சுலபமே நீ அடையவேண்டிய சுகுண சுந்தரியை இனிப் பல சூழ்ச்சிகள் செய்து அடையவேண்டியுளது. அன்று யான் செப்பிய வண்ணம் சோணாடு போகாமலும், யானையின் முன் செல்லாமலுமிருந்திருப்பையேல் என் எண்ணமெல்லாம் இலகுவே முடிந்திருக்கும். இனியோ நாம் நாகானந்தன் தாழ்வினாலேயே எண்ணிய கருமம் நிறைவேற்றுதல் வேண்டும். ஆயின் எண்ணுவதெளிது; எண்ணியவாறு முடித்தல் கடினம். எப்படியாயினும் நாகானந்தன்மேல் சுகுணனுக்கு வெறுப்புண்டாக்கும் வழி நாடவேண்டும். வரகுணரோ அவன் பால் புத்திர வாஞ்சைகொண்டு மன்னவனுக்கு அவனிடம் மென்மேலும் அன்பை பெருக்குகின்றார் என ஒற்றரால் ஓர்கின்றேன்.

சுந்திரகுமாரன்:— தந்தாய்! சுகுணசுந்தரிக்கு என்னிடம் சற்றும் காதலில்லை என எனக்கு நன்றாய்த் தெரிகின்றது. அவள் என்னை இன்முகத்தோடு வரவேற்பதில்லை. முன்போல் என்னுடன் வார்த்தையாடுவதில்லை. எவ்வளவு காலம் அவளுடனிருப்பினும் என் பக்கம் திரும்பாமலே தோழியருடன் வார்த்தையாடுகின்றனள். அல்லது யாதேனும் வேறு காரியம் பகர்ந்து என்னை வெளியேற்றி விடுகின்றனள். இதனால் அவளிடம் செல்லவே என் மனம் கூசுகின்றது. அவள் தற்சமயம் இருக்கும் கோலம் பார்த்தால் மனோநோயால் வாடுபவள் போல் தோற்றுகின்றது. இவற்றினைக் கருதின் தாங்கள் சொல்லியவாறே அவள் நாகானந்தன் மீது காதல் கொண்டிருந்தாலுமிருக்கலாமென எண்ணுகிறேன். இதற்கு முன் அவள் என்னுடையவளே என்னும் நிச்சயத்தால் அவளிடம் காதல் மிகுதியாய் எழுந்ததாய்த் தோன்றவில்லை. நாகானந்தன் என் போட்டியெனத் தோன்றவே என் காதல் கரைகடந்துளது. அவனிடப்பொறாமை விருத்தியாகின்றது. அவனை விரும்பும்



சுகுணமன்னர் பாலும், வரகுணர் பாலும் விருப்பு ஒழிந்து வெறுப்புண்டாகிறது. எங்கே சுகுண சுந்தரியையும் பாண்டியநாட்டினையும் ஒருங்கே இழக்கவேண்டி வருமோவென நெஞ்சம் வெந்துகின்றது. ஏதாவது ஒரு வழியில் எங்கு நாகானந்தன் குலம் விளங்கப்பெருமை அடைவானோ என அச்சம் உண்டாகுது. என் செய்வேன்?

ஜயதுங்கன்:—குழந்தாய்! நீ கூறியவரிடம்வெறுப்பும், நீ கூறிய விஷயங்களில் அச்சமும் எனக்கும் அடிக்கடி ஏற்படுகின்றது. ஆயினும் ஊக்கமது கைவிடுதல் கூடாது. அதனை விடுவதால் முற்றும் கோணலாய் முடியும். ஆதலால் மென்மேலும் முயன்று நாகானந்தன் சீரெல்லாம் போக்கி சுகுண சுந்தரிதன் காதலை மீட்டும் ஆக்கி அவள் தனை மணந்து பாண்டிநாட்டினைக் கைக்கொளல் வேண்டும். ஆதலின் குழந்தாய்! அவள் பராமுகமாயிருப்பினும் அவளிடம் போவதை நிறுத்தாதே. மொழியாடுவதை குறைக்காதே; தள்ளினும் பின்னடையாதே. சமயம் வாய்ந்த வேளையெல்லாம் அவள் தன்மனம் கரையப்பேசு. கரைவது காணின் காதலை ஓது. எவ்விதமும் உன் வசமாக்கு. எவ்வாறும் முயன்று பயன் பெறுவதாலேயே நாம் பெருமையடையலாம். பின்னால் நாடும் பெறலாம்.

சுந்திரகுமாரன்:—தந்தாய்! தங்கள் சொல்லை அலக்ஷியம் செய்ததால் அடைந்த பலன் போதும். யாது செய்தேனும் சுகுணசுந்தரியையும் பாண்டிய நாட்டினையும் நான் எனதாக்குதல்வேண்டும். அதுபற்றித் தாம் கூறியவழி நடப்பேன்.

ஜயதுங்கன்:—குழந்தாய்! வரகுணர் பாலேனும், நாகானந்தர் பாலேனும் உனக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பினை வெளியிடாதே. முன்னினும் நேசிப்பதாய் மயக்கு; கொக்கென்ன கருமமே கண்ணாயிரு. தாமதம் ஆயிற்று. போஜனம் செய்வோம் வா. (இருவருமறைதல்)

(தொடரும்)

# யோசனைக் கணக்கு.

(K. A. சுப்பிரமணியம்.)

ஒரு வெற்றிலை வியாபாரிக்கு மூன்று குமாரர்கள். அவன் தன் மூத்த குமாரனிடம் 50 கட்டு வெற்றிலையும், அடுத்த குமாரனிடம் 30 கட்டு வெற்றிலையும், கடைசி குமாரனிடம் 10கட்டு வெற்றிலையும் வியாபாரம் செய்துவரும்படி அனுப்புகிறான். மூவரும் ஒரே சந்தையில் வியாபாரம் செய்கிறார்கள். ஒரே விலைக்குத்தான் விற்கிறார்கள். மாலையில் வீட்டுக்கு வரும்பொழுது ஒரே மதிப்புள்ள தொகைதான் இருந்தது. எப்படி?

## விகடங்கள்.

1. ஒரு தாய் தன் குழந்தையிடம் காலணாவுக்கு சுண்ணாம்பும், காலணாவுக்கு புண்ணாக்கும் வாங்கிவரும்படி அனுப்பினாள். குழந்தை சாமான்களை உருப்போட்டுக் கொண்டே கடைக்குப்போய் காலணாவுக்கு சுண்ணாக்கும் காலணாவுக்கு புண்ணாம்பும் கொடு என்று கேட்டது. ஒரு கடையிலாவது கிடைக்கவில்லை.

2. ஒரு தாயார் தன்மகனுக்குசாதம்போட சாதத்தை எடுத்துத் தாழ்வாரத்தில் வைத்து தன் மகனிடம் சாதத்தை காக்காய் தின்றுவிடும் பார்த்துக்கொள் என்று சொல்லி வேறு காரியமாய் உள்ளே போனாள். திரும்பி வரும்பொழுது காக்கை சாதத்தைத் தின்றுகொண்டிருந்தது. மகனைக் கோபித்துக்கொண்டதில் அம்மா நீ சொன்னபடிதானே நான் செய்தேன். நீ காக்காய் தின்னும் பார்த்துக்கொள் என்று சொன்னாய். நானும் காக்காய் தின்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று பதில் கூறினான்.

## சரியான கேள்வி.

உதட்டில் புண், மாடுகறக்க முடியவில்லை, ஏன்?

விடைகள் அடுத்த இதழில் வரும்.


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

ஓர் இனிய தமிழ் நாவல்

இராஜேந்திர சுந்தரி

அல்லது

தியாகச்செல்வனின் தீரச்செயல்.

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்

அவர்களால் எழுதப்பட்டது

இதில் உலக வாழ்க்கை என்பது யாது? கணவன் என்பவர் யார்? நமது கடமை என்ன? என்பன போன்றவைகளையும், காதல் மணமே சிறந்ததென பல மேற்கோள்களுடன் விளக்கப்பட்டிருப்பதையும், கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே என்பதையும், பல நீதிமொழிகளையும், மற்றும் பல விஷயங்களையும் காணலாம். தமிழ் மக்களாகிய ஆண் பெண் இருபாலரும் படிக்க வேண்டியது அவசியம். சுமார் 350-பக்கங்கள் கொண்ட இந்நாவலின் இரண்டு பாகங்களின் விலை ரூ 1-8-0 தான்.

---

உண்மைக் காதல்

அல்லது

பரிமளா ராகவன்

என்னும் ஓர் இனிய தமிழ் நாவல்.

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்

அவர்களால் எழுதப்பட்டது.

உண்மைக்காதலுக்கு அழிவில்லை என்றும் பதிவிரதா தர்மமும் சன்மார்க்கமும் சிறந்ததென்றும், பல இடையூறுகளேற்படினும் உண்மைக்காதல் வெளிப்பட்டு நிலவுமென்றும், காதலருக்கேற்படும் தடைகளைத் தகர்ப்பதற்கேற்ற கருவியாகவே அக்காதல் துணைபோகிறதென்றும், பாமரரும் படித்தறியக்கூடிய எளிய தமிழ் நடையில் வெளிவந்துளது.

இதன் விலை அணா 0—8—0.

தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், சித்தன், பழனி.

# மதிப்புரைகள்.

## "ஜீவமணி."

இம்மாதப் பத்திரிகை வரப்பெற்றோம். இதுபெயருக்கேற்ற விஷயங்களைத் தன்னுள்ளடக்கி வெளிவரும் ஓர் சிறந்த மாதாந்தரப் பத்திரிகை. இதன் ஆசிரியர் டாக்டர் **T. C. சிங்காரம் அவர்கள்.** இச்சஞ்சிகையில் காதல் ததும்பும் இனிய கதைகள், கதைக்கேற்ற சித்திரப்படங்கள், உலக விநோதங்கள், மாதர் பகுதி முதலியன மிளிர்கின்றன.

இதில் வெளிவரும் கதைகள் தற்கால நாகரீகத்திற்கும், புதிய சீர்திருத்தத்திற்கும் ஏற்றதாயும், படித்தவரைப் பரவசப்படுத்தத் தக்கதாய் குறைந்த சந்தாவோடு இருப்பதால் பொதுமக்கள் ஆதரிப்பாராக.

**ஆண்டுச்சந்தா ரூ. 0—12—0.**
**தனிப்பிரதி ... ரூ. 0—0—6.**

கிடைக்குமிடம்:—

**மானேஜர், ஜீவமணி,**
பெரியகடை வீதி, திருச்சி.

---

## "சித்தவைத்திய ஆராய்ச்சி."

இது ஒரு மாதாந்தப் பத்திரிகை. இதன் பிரதி ஒன்று வரப்பெற்றோம். இது தாசர்புரத்தினின்று திரு. **H. தேவதாஸ், பி. எ., எல். டி.,** அவர்களையும், **பண்டித, பி. எஸ். ராமசாமி அவர்களையும்** ஆசிரியர்களாகக்கொண்டு வெளிவருகிறது. இது சித்தவைத்திய அபிவிருத்தியையே லட்சியமாகக்கொண்டு, இதுவரை வெளிவராத கொங்கணர் குருநூல், முக்காண்டசூத்திரம் 500, ரோமரிஷி 19, முதலிய நூல்களின் விஷயங்களை வெளியிடுகிறது. சித்தவைத்தியர்களுக்குப் பெரிதும் நன்மை பயக்குமென்பதில் சந்தேகமில்லை.

கிடைக்குமிடம்:—

**மானேஜர், சித்தவைத்திய ஆராய்ச்சி.**
தாசர்புரம், தின்னனூர் R. S.

# சொர்ண
# அயக்காந்த செந்தூரம்.

இது வாய்வு, வயிற்றுவலி, பாண்டு, சோகை, வீக்கம், காமாலை, தேகம் வெளுக்திருத்தல், பித்த நோய்கள், தலை மயக்கம், கிறுகிறுப்பு, செரியாமை, கபநோய், அரோசிகம், அன்னத்துவேஷம், கிராணி, அதிசாரம் முதலிய ரோகங்களைப்போக்கும். நல்ல பசியைக்கொடுத்து, இரத்த சுத்தியும், தேகபுஷ்டியும் தரும். நரம்புகள் முறுக்கேறும்.

48-நாள் செந்தூரம் விலை ரூ. 7. 24-நாள் விலை ரூ. 4.

அயச்செந்தூரம்

48-நாள் விலை ரூ. 5 24-நாள் விலை ரூ. 3.

# குளிர் சுர செந்தூரம்.

குளிர்சுரம், முறைசுரம், மலேரியா, இன்புளுயன்சா முதலியன நாட்பட்டதாயிருந்தாலும் புதிதாக உண்டாகி இருந்தாலும் ஒரு நாள் மருந்தில் நிச்சயமாய்க் குணமாகும். காய்ச்சல் கட்டி கரைந்துவிடும். இங்கிலீஷ் மருந்துகளில் தீராத நெடுநாட்பட்ட காந்தலையும் நிறுத்தியிருக்கிறது.

2-வேளை செந்தூரம் விலை ரூ. 3—0—0.

# சண்முக மெழுகு.

வாய்வுக்கட்டி, பால்கட்டி, உதரக்கட்டி, காய்ச்சல்கட்டி, மகோதரக்கட்டி, குன்மக்கட்டி முதலிய சகல கட்டிகளும் கரைந்து குணமாகும்,

9-வேளை விலை ரூ. 3—0—0.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**

# கர்ப்ப எண்ணெயைப்பற்றி

## கேள்விப்பட்டிருக்கிறேன்.

# அதைச்சாப்பிட்டால் என்ன செய்யும்?

கர்ப்ப எண்ணெய்:— பெண்களுக்குண்டாகும் வயிற்றுவலி, இடுப்பு வலி, கைகால் குடைச்சல், மார்பு வலி, தலை வலி முதலியவைகளைப் போக்கும்.

கர்ப்ப எண்ணெய்:— சூதகக்கட்டு, சூதகப்பெருக்கு, சூதோடு கூடிய சூதகம், சூதக சூலை, சூதகக்கட்டால் உண்டாகும் சரீரகனம், வயறு பெருத்தல் முதலியவைகளை நிவர்த்திக்கும்.

கர்ப்ப எண்ணெய்:— வயிற்றிரைச்சல், இருதயத்துடிப்பு, நெஞ்சடைப்பு, ஆயாசம், வாந்தி முதலியவைகளைக் குணப்படுத்தி மாதாந்தரத்தைக் கிரமப்படி வெளியேற்றி சரீர சுகத்தைக் கொடுக்கும்.

கர்ப்ப எண்ணெய்:— கர்ப்பக் கோளாறுகளையும், கருப்பையிலுள்ள பூச்சிகளால் ஏற்படும் கஷ்டங்களையும் நீக்கி, அகாலப்பிரசவம், ஜனனேந்திரியங்களின் நரம்புகளும், தசைகளும், பலவீனமாகி கருவழிதல் முதலிய வியாதிகளையும் குணமாக்கும்.

கர்ப்ப எண்ணெய்:—குழந்தை இல்லையேயென்றமனக்கவலை கொண்டுள்ள மாதர்களின் கவலையை ஒழித்து, குழந்தைப்பாக்கியத்தைக் கொடுக்கும்.

கர்ப்ப எண்ணெய்:— பெண்களின் சகல வியாதிகளையும் சாந்தப்படுத்தி பலத்தையும் முகவசீகரத்தையும் கொடுக்கும். ஆதலால் பெண்மணிகள் ஒவ்வொருவரிடமும் அவசியம் இருக்கவேண்டியது.

ஒரு புட்டி விலை ரூபாய் இரண்டேதான்.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I**

# நற்சாட்சிகள்.

## 6-மாதம் கர்ப்பம்.

என் மனைவிக்கு 3-வருஷகாலமாக இருந்த சூதக வயிற்று வலிக்கு தங்கள் கர்ப்ப எண்ணெய் வாங்கிக்கொடுத்ததில் பூரண சுகமாகி 6-மாத கர்ப்பம் உண்டாகியிருக்கிறது. ஆகையால் என் சிநேகிதர் குடும்பங்களுக்கு கர்ப்ப எண்ணெய் 6-புட்டிகள் வி. பி. யில் அனுப்பக்கோருகிறேன்.

(Sd.) பெ. ரு. சின்னசாமி பண்டிட்,
இந்தியன் பிஸ்கட் பாக்டரி, எட்டியாபுரம் போஸ்ட்.

---

## குழந்தை பிறந்தது.

தங்கள் கர்ப்ப எண்ணெயை 4-வருஷமாக புத்திரசந்தானமில்லாமலிருந்த என் மருமகள் இரண்டு தடவை வாங்கிச் சாப்பிட்டதில் உடம்பிலுள்ள சிக்குகள் செளக்கியமாகி, ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

அல்லிக்குண்டம், சு. வி. பே. கலியாணத்தேவர்,
குண்டுமலைத் தோட்டம், கடுகுமுடி டிவிஷன்,
தலையார் போஸ்டு, திருவாங்கூர்.

---

## உதிரக்கட்டி பறந்துவிட்டது.

தங்கள் கர்ப்ப எண்ணெயை 3-மாதாந்தரகாலமாய் என் மனைவி உபயோகித்து வந்ததில் உதிரக்கட்டி கைகால் குடைதல், வயிற்றுவலி, சரியாய் மாதவிலக்காகாதிருத்தல் இதுகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிற்று.

(Sd.) சி. முத்துச்சாமிக் கவுண்டன்,
வேடசந்தூர், திண்டுக்கல்.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I.**

# மேகராஜாங்க எண்ணெய்.

இது மேகரோகங்களுக்கும், புண்புரைகளுக்கும், சூலை நீர், மேகப்பத்துகளுக்கும் உயர்ந்த எண்ணெய். காலையில் மட்டும் 5-நாள் சாப்பிட சுகபேதியாகி வியாதியைக் கண்டிக்கும். மேகரோகங்கள், கிரந்தி, புண்புரைகள், சிரங்கு, கரப்பான் நீர்கள், பத்துகள், சூலைநீர், பவுத்திரம், நாட்பட்ட வெட்டை, அரையாப்பு, தொடைவாழை, ஆறாத ரணங்கள் கண்டமாலை, கன்னப்புத்து முதலிய வியாதிகள் நீங்கும். இது எண்ணெய்ப் போக்கானதால் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3—0—0.

## சர்வரோக சஞ்சீவி எண்ணெய்.

இதைக் காலை மாலை பசும்பாலில் 3-முதல் 5-துளிகள் விட்டுச் சாப்பிட மேகரோகங்கள், சொறிசிரங்கு, அரிப்பு, தடிப்பு, படை, ரணங்கள், மூலச்சூடு, மூலவாய்வு, கண்,கை கால் எரிவு முதலியன நீங்கி நல்ல இரத்த விருத்தியும், பலமும் உண்டாகும். இதை ரணங்களுக்கும் மேகப்புண், படை, சொறிசிரங்குகளுக்கும் மேற்பூச்சாகத் தடவலாம். பத்தியமில்லை.

பெரிய புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

சிறிய புட்டி விலை ரூ. 1—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**

# சந்தனாதித் தைலம்.

எமது முன்னோர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது.

இதை தலை முழுகி வந்தால் கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுத்து, தலை நரம்புகளுக்கு பலத்தைக் கொடுக்கும். மூளைக்கொதிப்பு, கண் புகைச்சல், கண்ணில் நீர் வடிதல், கபால வரட்சி, பீநிசம், சொரணை, நீர்த்தாரை காந்தல், மண்டைக்குத்து இவைகள் நீங்கும். சகலவித மேக ரோகங்களையும் நீக்கும். சிரசில் பதமிட்டுவந்தால் தூக்கமின்மை, செம்பட்டை மயிர்கள், வெடிக்கல் முதலியன நீங்கி மயிர் கறுத்துவளரும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும். ஆண் பெண் இருபாலரும், குழந்தைகளும் இத்தைலத்தை தேய்த்து முழுகலாம்.

16-அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0,

## ஒருத் தலைவலித் தைலம்.

தீராத ஒருத் தலைவலியைத் தீர்ப்பதில் கைகண்டது. ஒருத் தலைவலி, இருபக்கமும் வலி, கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் மங்கல், நீர், பீனிசம் இவைகள் தீரும். நாட்பட்ட ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணங்கண்டது. இத்தைலத்தை உபயோகித்து குணமடைந்தவர் எண்ணிறந்தோர். மிக்க அனுபவமானது.

16-அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**

தங்க மெடல்கள் பரிசுபெற்ற

சி. பி. சாமி

# சித்தரசம்.

சிறந்த மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

பத்தியம் இல்லாதது.

குணம் இல்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

இது சகல ரோகங்களுக்கும் உள்ளும் புறமும் உபயோகிக்க நிமிஷக்கணக்கில் குணம் தருவது. இது அநேக வியாதிகளுக்குக் கொடுத்து அனுபவமானது. சகல வியாதிகளுக்கும் இது ஒன்றே போதுமானது. ஒருமருந்திலும் கட்டுப்படாத வியாதிகளெல்லாம் இதில் குணமாகின்றன. திடீரென்று சம்பவிக்கக்கூடிய ஆபத்தான சகல ரோகங்களும் அதி சீக்கிரத்தில் குணமாகும். ஜுரம், இருமல், தலைவலி, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, ஜலதோஷம், அஜீரணம், புளித்தேப்பம், கைகால் பிடிப்பு, ஜன்னி, பார்சவாய்வு, கிறுகிறுப்பு, மார்ச்சளி, இளைப்பு, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல், வலிப்பு, வாய்வு, அரோசிகம், பசியின்மை, விக்கல், நெஞ்சுவலி, அன்னதோஷம், தலைமயக்கம், சூதகவயிற்றுவலி, குன்மம், கால்ரா விரைவாய்வு முதலிய சகல ரோகங்களும் குணமாகும். நோயுள்ள இடங்களில் மேற்பூச்சாகவும் தேய்க்கலாம். பல்வலி, பல்லரணை, தந்தவாய்வு, பல்லசைவு, எயிறு வீக்கம் முதலியவைகளுக்கு பஞ்சில் 3-துளி விட்டு வலியுள்ள இடத்தில் கொஞ்சநேரம் வைக்கலாம். ஒரு புட்டி உங்கள் கைவசமிருப்பின் எதிர்பாராது உண்டாகும் நோய்களுக்கு சமயத்தில் சிகிச்சைசெய்ய ஏதுவாகும். இன்றே எழுதுங்கள்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1.  டஜன் விலை ரூ. 10.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**

**பழனி. S I.**

# சுகபேதி மாத்திரை.

வியாதி இல்லாமல் இருக்கவேண்டுமானால் வயிற்றை மாதத்திற்கொருமுறை சுத்திசெய்து மலக்கட்டு இல்லாமல் இருக்கவேண்டும். வாந்தி, ஆசனக்கடுப்பு முதலியன இல்லாமல் சுகமாய்ப் பேதியாகும். ஒவ்வொருவரிடமும் ஒரு புட்டி இருக்கவேண்டியது மிக அவசியம். மலக்கட்டு நீங்க வேண்டுமானால் இரவில் படுக்கும்போது 1 அல்லது 2 மாத்திரைகள் விழுங்கி பால் அல்லது தண்ணீர் சாப்பிடவும். காலையில் சுகபேதியாகும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 0—12—0.

# பெரும்பாடு நிவாரணி.

இரத்தப்போக்கைப்பற்றி கவலைப்படவேண்டாம்

பெண்களுக்கு வீட்டு விலக்குக்காலங்களில் மிகுதியாக இரத்தம் போதல், காலந்தவறியும் அடிக்கடியும் இரத்தம் வந்துகொண்டிருத்தல், பெரும்பாடு, மூத்திரத்தில் இரத்தம் போதல் முதலிய காரணங்களால் சரீரம் இளைத்து பலமற்றிருத்தல், அடிக்கடி வாந்தி எடுத்தல், வாந்தியில் இரத்தம் விழல் முதலியவைகளைச் சுகப்படுத்துவதில் பெயர்பெற்றது.

24-வேளை விலை ரூ. 5—0—0.

## ஜீரண சஞ்சீவி லேகியம்.

குன்மம், அஜீரணம், பொருமல், வயிற்றுப்போக்கு, புளியேப்பம், வாய்வு, அதிசாரம், இவைகளைத்தீர்ப்பதில் கைகண்டது. அதிகபசியும், இரத்தவிர்த்தியும் உண்டாகும்.

சேர் 1-க்கு விலை ரூ. 3—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**

**பழனி. S. I.**

Regd. No. M. 3210

எவர்! எவர்!!

**இளமையை விரும்பாதார்?**

தளர்ந்தவயதினரும், மெலிந்த உடலினரும்
இழந்த பலமடையச் செய்வது
மகானருளால் கிடைக்கப்பெற்ற எமது
சிறந்த ஔடதமே!

**Permanent Cure.**



**Cure Guaranteed.**

# தங்கபஸ்பம்.

நோயுற்றவர், நோயற்றவர் இருதாத்தினரும்
உட்கொள்ளலாம்.
தேகசுகம், திடகாத்திரம், தாதுபுஷ்டி
அளிப்பதில் இணையற்றது.
24-நாள் பஸ்பம் விலை ரூ. 10—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
பிராஞ்சு:- 1-54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

Edited. Printed & Published by Dr. C. P. Sami
at the Nityananda Press, Palni.